# பூர்ணசந்திரோதயம்.

## A Tamil Monthly Journal

***Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization.***

நான்காந்தொகுதி.

1913ஞு மேமீ 15உ முதல் 1914ஞு ஏப்பிரல்மீ 15உ வரை
12 சஞ்சிகைகள் கொண்டது.

அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S., —பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2.

மதுரை.
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

II

# உள்ளுறை.


| விஷயம். | | பக்கம். |
|---|---|---|
| அன்னிபெஸண்டு அம்மையாரின் 66-வது ஆண்டு நிறைவு | அ. ரங்கஸ்வாமி ஐயர். | 185 |
| அஹல்யா சாப விமோசனம் | R. ஸ்ரீநிவாஸ ஐயர், M. A., | 90, 161, 247, 286, 329, 447 |
| அவதாரங்கள் | K. கோடீசுவர ஐயர். | 403 |
| அஸிஸிஸி தேசத்து ஸெண்ட் பிரான்ஸிஸ் என்ற ஞானியார் | B. S. R. சுப்பிரமணியன் | 435B |
| ஆரியர்களின் பூர்வ நாகரிகம் | R. S. நாராயணஸ்வாமி ஐயர் | 127 |
| ஆத்மபோதம் | யோகி சுந்தரராஜம். | 370, 436 |
| இராமகிருஷ்ண பரமஹம்ஸர் | M. சாமிநாதன் | 409 |
| உதயநக்ஷத்திர ஸங்கம் | G. S. அருண்டேல் | 270 |
| உயர் லக்ஷ்யங்களின் பிரயோஜனம் | B. S. R. சுப்பிரமணியன் | 278 |
| கர்மம் | இசக்கியாடும் பெருமாள்பிள்ளை | 119, 153, 205 |
| கல்விகற்பித்தல் ஈசுவர கைங்கர்யமெனக் கருதல் | ப. நாராயண ஐயர் | 230 |
| காலஞ்சென்ற பி. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் | வி. ராமசந்திர ஐயர் | 299 |
| காலஞ்சென்ற நமது பத்திராதிபர் பிரஹ்மஸ்ரீ ப. நாராயண ஐயரவர்களின் சரித்திரச் சுருக்கம் | P. N. நாகநாதையர். | 354, 396 |

சமாசாரம்:—

| | |
|---|---|
| ஆகாயக் கப்பல்கள் ... | 224 |
| ஆகாசகமனம் | 469 |
| ஆத்தங்குடி ஸரஸ்வதீ விலாஸ ஸபை ... | 343, 381 |
| ஆத்தங்குடி பிரஹ்மஞான ஸபையில் ஸகோதரர் P. குமரப்பசெட்டியாரால் செய்யப்பட்ட உபந்யாஸம் | 380 |
| இருமல் உள்ள செடி ... | 110 |
| உதயதிசை நக்ஷத்திர ஸங்கம் ... | 304, 469 |
| ஏழைப் பெண்களின் பண்டு ... | 109 |
| ஐக்கோர்ட் அப்பீல் ... | 261 |
| ஐரோப்பாக்கண்டத்து பிரஹ்மஞான கிளைச்சபைகளின் மஹாஸபை ஸ்டாக்ஹோமில் | 76 |
| ஒரு நன் கொடை | 141 |

விஷயம். பக்கம்.

சமாசாரம் :—

குமாரேச கிருபா ஸங்கம் ... 304
கும்பகோணம் "பிரஹ்ம வித்யா லாட்ஜ்" என்ற பிரஹமஞான ஸபையின் 4-2-14-வ கூட்டத்து நடவடிக்கை 379
சிக்காகோ நகரத்தில் ஸ்திரீகளுக்கென்று தனித்த நியாயஸ்தலம் 37
சீனா தேசத்தில் புது விதி ஏற்பாடு ... 110
தியஸாபிகல் எடுகேஷனல் டிரஸ்டு ... 183, 223
நத்தை ... 109
பிரஹ்மஞான கிளைச்சங்கங்களின் மஹா ஸபை:—
தஞ்சாவூர் ... 77
கோயம்புத்தூர் ... 141
நெல்லூர் ... 141, 181
பேரளம் ... 141
மதுரை ... 141
பிரஹ்மஞான ஸமாஜத்தின் அந்தரங்க ஸபைக்கூட்டம் 223
பிரஹ்மஞான ஸபையின் வருஷாந்தரக் கூட்டம் ... 303
பிரஹமஞான ஸபை அங்கத்தினர்களின் கடமை ... 304
மதுரை பிரஹ்மஞான மந்திரத்தில் கூடிய 1-2-14 மீட்டிங்கின் தீர்மானம் 378
மதுரை பிரஹ்மஞான ஸபையில் வாரந்தோறும் நடக்கும் மீட்டிங்குகள் 378
மதுரைத் தமிழ்ச் சங்கத்து 12-வது ஆண்டு நிறைவு மஹோத்ஸவம் 77
மாட்சிமை தங்கிய ஜார்ஜ் சக்ரவர்த்தியார் வைத்தியசாலை 37
மின்சாரத்தின் உபயோகங்கள் ... 141
யாழ்ப்பாணத்தில் ஸ்ரீமான் ராமநாதன் அவர்கள் காலேஜ் 142
ரவீந்திரநாத் டாகூர் ... 302
வைத்திய சாஸ்திர நிபுணர்களின் மஹாஸபை ... 263
ஸ்ரீமான் லெட்பீடர் ... 78
ஸ்ரீமீநாக்ஷி வித்யாசாலை பிரஹ்மஞான ஸபையின் வித்யாபிவிருத்தி சங்கத்தைச் சேர்ந்தது 303
லக்ஷ்மீமேவஜயதி நாந்ருதம் ... 35

விஷயம். பக்கம்.

ஜமாசாரம் :—
ஹார்டிஞ்சு பிரபு அவர்களின் ஜநநதிநக்கொண்டாட்டம் ... 79
தற்காலநிலைமை—அ. ரங்கஸ்வாமி ஐயர் 225, 265, 305, 345, 388, 428
திருமந்திர ஆராய்ச்சி—மாதவன் 13, 51, 102
துகாராம் பாவாவின் சரித்திரம் } A. சிவராவ் 22, 57, 106, 169, 209, 235, 290, 335
தேவாபி சோடச கலாமாலை—ஸ்வாமி M. வேதநாயகம் F.T.S. 243
தோற்றுத் துணைவர்கள்—அ. நம்மாழ்வார். 458
நம்முடைய வாலிபர்கள் நற்குண சம்பத்து அமையப்பெறும் முறை } விசாலாக்ஷி அம்மாள் 3, 47
பத்திரிகை வரவு:—
இந்தியன் அட்வெர்டைஸர் ... 301
ஞானபாநு ... 74
நக்ஷத்திர தூதன். 468
மாதர் மனோரஞ்சனி ... 378
வாலிப நகரவாஸி ... 34
விவசாய பஞ்சாங்கம் ... 75
விசுவகர்மன் ... 302
பகவான் கௌதமபுத்தரின் சரித்திரம்—ப. நாராயணையர் 39
பிதகோராஸ் என்பவரின் சரித்திரம்—ப. நாராயணையர் 191
பிரஹ்மக்ஞான சங்கமும் அதன் கொள்கைகளும் } ஆத்தங்குடி ஸ்வாமிநாத ஐயர் 457
பிரஹ்மக்ஞான தர்சநம் (பாலபாடம்) } வி. வெங்குஸாமி ஐயர் 20, 63, 95, 138, 171, 217, 282, 326, 364, 444
பிரஹ்மக்ஞானம் என்பது யாது?—ப. நாராயண ஐயர் 313
பிரக்ஞா பாரமிதை—ப. நாராயண ஐயர் 143
புத்தக வரவு:—
இந்தியாவின் தத்துவ ஞானம். ... 34
இன்னிசை இருநூறு ... 179
தர்மாதுரன் ... 34
எல்லாம் ஒன்றே 468
கந்தபுராண வசநச் சுருக்கம் ... 180
குமண சரித்திரம் ... 181
குசாவதி ... 222
சர்வசமய சமரஸமான பிரார்த்தனை மாலை ... 179
சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம் ... 341
சுதவனேசுரர் பதிகம் ... 301

| விஷயம்: | பக்கம். |
|---|---|
| புத்தகவரவு :— | |
| ஞானமிருதம் ... | 35 |
| திருக்குறள் வசநம் ... | 221 |
| திருமூலநாயனார் ஞான மந்திரம் ... | 341 |
| தோத்திரப்பா மாலை ... | 341 |
| நமது சிறிய சத்துருக்கள் ... | 222 |
| பஞ்சதசப்பிரகரணம் ... | 74 |
| பிரஹ்மஞான ஸபை ... | 34 |
| பிரஹ்மஞான ஜீவியம் ... | 34 |
| பிரஹ்மஸமாஜ ஸித்தாந்த ஸங்கிரஹ வினாவிடை | 179 |
| புட்பயந்தம் ... | 221 |
| மெஞ்ஞான போதம் ... | 74 |
| பூர்ணசந்திரோதயத்தின் நான்காம் வருஷப்பிறப்பு — ப. நாராயணையர் | 1 |
| பூலோக புவர்லோக ஸம்பந்தம்—B. S. R. சுப்பிரமணியன். | 321 |
| பெரியார் மாட்டு தீமைசெய்ய நினைத்தல் தனக்கே துன்பந்தரும் — ஆர். சுந்தரராஜ ஐயர் | 219 |
| மரணபயம் வேண்டாம்—பி. நாராயண ஐயர். | 84, 111, 115, 198 |
| மதுரை வித்யாதர்ம பரிபாலனஸபை—ஆர் ரங்கஸ்வாமி ஐயர் | 297 |
| மநம்—மு. வேங்கடஸாமி நாட்டர். | 257, 295 |
| வாதகுஷிணையால் வரும் தீமைகளும் ஸ்நேக லதையின் ஆத்மத்தியாகத்தைப்பற்றிய சில குறிப்புகளும் — ம. கோபாலகிருஷ்ணையர் | 414 |
| ஸ்ரீ சங்கர ஜயந்தி—ப. நாராயண ஐயர். | 19 |
| ஸ்ரீமான் லெட்பீடரின் சரித்திரம்—ப. நாராயணையர் | 79 |
| ஸ்ரீ ப. நாராயண ஐயரவர்கள் பேரில் இரங்கற்பாக்கள் — எஸ். ஸ்வாமிநாதையர். | 362 |
| ஷை — மு. வேங்கடஸாமி நாட்டார். | 377 |
| ஸங்க்ராந்தி அல்லது உத்தராயணம் — ஆர். எஸ். நாராயண ஸ்வாமி ஐயர் | 30, 68, 98 |
| ஸுமதியென்னும் உத்தமியின்சரித்திரம்—எஸ் ஸ்வாமிநாதையர் | 249 |
| ஹிந்துக்களின் பூர்வநூல்கள்—R. S. நாராயணஸ்வாமி ஐயர் | 464 |

VIII

Supplement to the "Poornachandrodayam."



PRINTED AT THE SRI VANI VILAS PRESS, SRIRANGAM.

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 4. } 1913ளு மேமீ 15வ. பிரமாதீசளு வைகாசிமீ 2வ. { பகுதி 1.


## பூர்ணசந்திரோதயத்தின் நான்காம் வருஷப்பிறப்பு.

1. ஈசுவரகிருபையாலும், மஹாத்மாக்களின் அநுக்ரஹத்தாலும், இப் பத்திரிகைக்கு 3 ஆண்டு நிறைந்து, 4-ம் ஆண்டு ஆரம்பமாகிறது. நம்முடைய தமிழ்நாட்டிற்கு, முக்கியமாக பிரஹ்மஞான சபையைச் சேர்ந்த ஆங்கிலம் தெரியாத அங்கத்தினர்க்கு, இப்பத்திரிகை ஞான விஷயங்களைப் பரவச்செய்யும் ஒரு சாதநமாக இருக்கிறதென்பதை அறிஞர்கள் ஒப்புக்கொள்வார்கள்; இப்பத்திரிகை மேன்மேலும் நம்மவர்க்கு அறிவை அளிக்கும் சாதநமாக அபிவிருத்தியடைய வேண்டுமென்பது, இப்பத்திரிகையை நடத்துபவர்களின் நோக்கமாம். அந்நோக்கம் பூர்ணமாய் நிறைவேறும்படி செய்தல், பத்திரிகையை வாங்கிப்படிப்பவர்களைப் பொறுத்த கடமையாம். இதைப்படிக்கும் ஒவ்வொருவரும் ஓரோர் சந்தாதாரை ஏற்படுத்திக் கொடுப்பாராகில் இன்னும் அதிக அருமையான விஷயங்களை இதன் மூலமாய் வெளிப்படுத்த இயலும்.

2. இனி வருங்காலம் மிகவும் முக்கியமானது. ஒரு மஹா புருஷன் அவதரிக்கப் போகின்றார் என்ற நன்னம்பிக்கை உலகமெங்கும் பரவிக்கொண்டிருக்கின்றது. உலகமென்றால் அறிஞர்கள் சமூகமென்று கருதவேண்டும். உலகமென்பது உயர்ந்தோராவர். அதனால், அம்மஹா புருஷன் வெளிப்படும் ஸமயத்தை எதிர் பார்க்கும் நாம் செய்யவேண்டிய உத்தரவாதங்கள் பல உண்டு. [illegible]

சந்தித்தாலும் கோபதாபங்களைத் தவிர்க்கவேண்டும். சாந்தமும் சமாதானமு முள்ளவராக ஒழுகவேண்டும். இன் சொல்லும் நல்ல சொல்லும் சொல்லவேண்டும். தீய எண்ணத்தை ஒழிக்கவேண்டும்; நன்றையே நினைக்கவேண்டும்; பெரியாரிடமும் அறிஞரிடமும், ஞானிகளிடமும் பக்தியும் சிரத்தையுமுடையவராக நடக்க வேண்டும். சில துஷ்டர்கள் தங்களுடைய சிற்றறிவு என்ற கோலால் உலகத்தை அளக்க முயற்சிக்கின்ற முறையில் மஹாபுருஷர்களின் நிந்தனையும் ஞானிகளின் நிந்தனையும் கூசாமல் புரிகிறார்கள். அவர்களைப்பற்றி திருமூலர் அடியில் வருமாறு கூறுகின்றனர்.

"பத்தினி, பக்தர்கள், தத்துவ ஞானிகள்
சித்தம் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண் டொன் றின் மாய்ந்திடும்,
சத்திய மீது சதாநந்தி ஆணையே"—திருமந்திரம்.

அதனால் இத்தகையர் பாதையினின்று விலகி, எவரிடத்தில் நலம் தோன்றினும், நமர் பிறர், என்ற வேற்றுமை யில்லாமல், அதை அறிதலும், ஆதரவு செய்தலும், நன்கு மதித்தலும், வணங்குதலும் வேண்டும். இவர் ஆங்கிலேயர், இவர் வெள்ளைக்காரர், இவர் நான்காம் வர்ணத்தவர், இவரிடமிருந்து, இந்தியர் முக்கியமாக பிராஹ்மணர் ஞானசாஸ்திரம் கற்றல் கூடாது. இத்தன்மையான அகங்காரத்தை நம்மவர் தவிர்க்கக் கடவர். அப்போது தான் உய்வுண்டு, அப்போதுதான் நாம் சுகீர்தம் பெறுவோம். இவ்விதம் நம்மவர் நடைபெறுவாராகில், நம்முடைய தேசம் சாந்தம் பெறும்; பெறவே, இதன் பயன் சுகந்தம்போல் பரவும். அதனால் நாம் செய்யும் கடமையை நடத்தியவராவோம். ஆங்கிலப் பத்திரிகைகளாக இருப்பினும் சரி, சுதேச பாஷையில் நடைபெறும் பத்திரிகைகளாக இருப்பினும் சரி, பத்திரிகைகளின் உண்மையான நோக்கமெல்லாம், ஜனஸமூகத்தில் நல்ல எண்ணங்களைப் பரவச்செய்தலும், தீய எண்ணங்களும் துவேஷ புத்தியும் உதயமாகாமல் தடுத்தலும், மனிதரைச் சாந்தராகவும் சந்துஷ்டராகவும் செய்வித்தலுமாம். இத்தர்மத்தை உதறித்தள்ளி இறுமாப்புக்கொண்டு தலைகீழாக நடைபெறும் பத்திரிகைகள் இருத்தலில் இறத்தலே நன்றாம். நல்ல பத்திரிகைகள் மேன்மேலும் அபிவிருத்தி யடையவேண்டு மென்பதே நம்முடைய பிரார்த்தனை.

ப. நா.

# நம்முடைய வாலிபர்கள் நற்குணஸம்பத்து அமையப்பெறும் முறை.*

1. பல படிகளுள்ள பள்ளிக்கூடங்களில் கற்கும் மாணவர்கள் பொதுவாய் அநுஷ்டிக்க வேண்டிய ஒழுக்க முறைகளையும் அவைகளுக்கு ஆதாரமாகும் தத்துவங்களையும் விவரமாய் இதன்கண் பிரஸ்தாபிப்போம். அவைகளை எல்லாம் ஒரே வார்த்தையால் சொல்லுதல் இயலாது. ஆயினும், பக்தி (Reverence) என்ற வார்த்தையில் எல்லா நலங்களும் அடங்கினவையாக ஒருவாறு சொல்லலாம்.† நம்முடைய சுற்றத்துடன் நேர்மையான ஸம்பந்தம் பெறுதலுக்கும் நம்மிடம் உள்ள தேவாத்மசக்தி (Divine life) மலருதலுக்கும் அநுகூலமான பல நலங்களும் (Virtues,) பக்தி, பேரன்பு என்ற ஒரு வார்த்தையில் அடங்கும். இனி சொல்லப்போகும் எல்லா முறைகளிலும், பக்தி என்பது முதன்மையானது. அதனுடன் இன்னும் இரண்டு முறைகளையும் சேர்த்து இளைஞர்கள் அபிவிருத்திக்கு அநுகூலமான முறைகளை இதன்கண் தெரிவிப்போம்.

## (1) பக்தி அல்லது பேரன்பு.

2. பேரன்பு என்பது உலகில் மனிதனை வாழ்தலுக்கு முக்யமான ஆதாரம். இந்த ஸம்பத்து நம்மிடம் சீக்கிரம் அபிவிருத்தியாக வேண்டுமென்றே, நாம் பிறக்கும் காலத்தில் உரிய சுற்றங்களை ஈசுவரன் ஏற்படுத்துகிறார். குழந்தையானவன் மூத்தோர்கள் உள்ள பிரபஞ்சத்தில் பிறக்கிறான். சரீரத்திலும், அறிவிலும், ஞான முறையிலும் அவர்கள் உதவியை எதிர்பார்த்து நடைபெறுகிறான். பக்தியின் ஆதாரம் அன்பு. சிறு குழந்தையானவன் தன்.

* இதன் சுருக்கம் கும்பகோணத்தில் சென்ற மாதத்தில் கூடிய ஸ்திரீசங்கங்களின் சபையில் ஸ்ரீமதி விசாலாக்ஷியம்மாள் அவர்களால் வாசிக்கப் பெற்றது.

† அன்பு என்பது நாம் பிரியப்படும் வஸ்துவின்மேல் நமக்குண்டாகும் மன நிகழ்ச்சி. அது நம்மின் மேலாயினோரிடம், முக்கியமாய், பெற்றோர், குரு, கடவுள் இவர்கள்மேல் நிகழுமாயின் அதற்குப் பேரன்பு அல்லது பக்தி என்று பெயர்.

னுடைய நெஞ்சில் அன்புடையவனாக உலகயாத்திரையை ஆரம்பிக்கிறான். பெற்றோர்களின் ஒழுக்கத்திற்கும், அறிவிற்கும் தக்கபடி குழந்தையானவன் வயதாக வயதாக அவனிடமுள்ள அன்பு மேன்மேலும் விருத்தியாகி பக்தியாக மலரும்; மூத்தோர்களின் பிரியச் செயலையும் அவர்களின் ஆதரவையும் நன்கு உணருகிறான். மாதா பிதாக்கள் குழந்தைகளை இவ்வுலகத்தில் பெறுகிறார்கள். ஸந்ததிகளைப்பெற வேண்டுமென அவர்கள் இச்சித்தார்கள். அவ்விச்சைக் கிணங்கி, ஈசுவரன் தம்முடைய குழந்தைகளில் ஒருவனை மாதா பிதாக்கள் வசம் ஒப்புவிக்கின்றார். இவ்விதமே மாதாபிதாக்களும் அவர்கள் பெற்றோர்வசம் ஒப்புவிக்கப்பெற்று வளர்ந்தவர்களன்றோ? இதுவே உலக தர்மம். ஆகவே பெற்றோர் என்பவர் உத்தரவாதங்களை வகிப்பவராவர், பலஹீனர்களான குழந்தைகள் என்பார் சுதந்தரமுடையவராவர். ஒரு குடும்பத்தில் ஒருவன் பிறத்தல் அவனுடைய பூர்வஜன்ம கர்மகதியைப் பற்றியதாக இருப்பினும், ஸந்ததி வேண்டுமென்ற இச்சையானது குழந்தையின் பிரவேசத்திற்கு வழியாக அமைகிறது. குழந்தை சுதந்தரங்களை உடையவன் என்றோம். அச்சுதந்தரங்கள் என்ன? (i) குழந்தையின் கண்ணுள்ள சக்திகளும் குணங்களும் பூர்ணமாய் மலர்ந்து வியக்தமாகும்படியாய் அநுகூலமான சமயங்களையும் ஸாவகாசங்களையும் பெற்றோர்கள் அமைப்பிக்கவேண்டும். (ii) குழந்தைக்கு எவ்விதத்தீங்கும் நேரிடாமல் கவலையுடன் அவனைப் பாதுகாத்தலும், அவனைக் கவலையுடனும் அன்புடனும் நல்வழியில் நடத்தலும், அவன் ஸந்தோஷமாகவும் பிரயோஜநகரமாகவும் இருக்கும்படி செய்தலும் பெற்றோர் கடமையாம். மேலும் குழந்தையின் சுபாவத்தை அறிதலும், அவனை நிர்ப்பந்திக்காமல் இருத்தலும், அவனைத் தம்முடைய தம்பியைப்போல நடத்தலும் வேண்டும். அவனிடமிருந்து வேலை வாங்குதல் என்ற சுதந்தரம் பெற்றோர் உடையராகக் கருதற்க.

3. உண்மையில் குழந்தையை உத்தேசிக்க பெற்றோருக்கு சுதந்தரங்கள் இல்லை என்றே சொல்லலாம். அவருக்கு உத்தரவாதங்கள் தான் உண்டு. ஒரு குழந்தையைத் தன் குடும்பத்தில் பிறக்க ஒருவன் விரும்புகிறான், அவ்விருப்பத்தின் வழியாக ஈசுவரன் அக்குழந்தையைக் கொடுக்கிறார். அக்குழந்தையைப் பெற்றவன் உத்-

தரவாதத்தைப் பெறுகிறான். அந்த உத்தரவாதத்தை நிறைவேற்ற வேண்டும். அதாவது தன்னுடைய சக்தியநுஸாரமாய்க் குழந்தையை உத்தேசித்து தன்னுடைய விருப்பு வெறுப்புக்களைத் தவிர்க்கவேண்டும். குழந்தையின் க்ஷேமத்தைக் கருதித் தன்னுடைய பிரியங்களை வெறுக்கவேண்டும். குழந்தையானவன் ஸ்வர்க்க லோகத்தினின்று நேராக வந்தவன். அதனால் நாம் செய்யும் அன்பையும் ஆதரவையும் உணர்ந்து அவனுடைய வயது காலத்தில் பெற்றோர்களுக்கு நன்றி பாராட்டுவான். பலதுறைகளில் அவன் செய்யும் கைங்கர்யங்களால் அந்நன்றியைக் காட்டுவான், வணக்கமும் பணிவுமுள்ளவனாக இருப்பான். பயபக்தி விச்வாஸமுள்ளவனாக ஒழுகுவான். இவ்விதம் குழந்தையின்கண் அமைந்திருந்த நல்ல ஸம்பத்துக்களான குணங்கள் மலர்ச்சிபெறும். இக்காலத்தில் பிள்ளைகள் பெற்றோர்களை எதிர்க்கிறார்களென்றும் வணக்கமில்லாதவர்களாய் ஒழுகுகிறார்களென்றும், பெற்றோர்களிடம் எவ்வித மதிப்பும் மர்யாதையும் வைக்கிறார்களில்லையென்றும் கேள்விப்படுகிறோம். இதற்குக் காரணம் பெற்றோர்கள் குழந்தைகளைப் பெறுதலினால் ஏற்படும் உயர்ந்த உத்தரவாதத்தையுணர்ந்து ஸரியாய்க் கொண்டு செலுத்தாமல் இருக்கிறதுதான். விவாஹம் என்பது, ஸாதாரணமாக அவசியமாகவே நடைபெறவேண்டிய விஷயமென்றும், குழந்தைகள் ஸாதாரணமாக ஜனிக்கவேண்டியவைகளை என்றும் ஜனங்கள் கருதுகின்றார்கள். அஃதறிவீனம். அறிவீனத்தின் பயனை அநுபவிக்கவேண்டியது தானே. விவாஹத்திற்கு முன்னர் பெண்மக்களும் ஆண்மக்களும் விவாஹத்தின் உத்தரவாதம் இன்னது என்பதையும் அவர்கள் பெற்றோர்கள் ஆகுங்காலத்தில் இன்ன உத்தரவாதங்கள் ஏற்படுகின்றன என்பதையும், மக்கட்பேறு என்றால் வாழ்நாள் முழுவதும் தியாகமுறை பற்றி ஒழுகுதல் என்பதையும் அறிந்து கொண்டார்களில்லை. அவைகளின் பொருட்டு வேண்டிய படிப்பையும் பெற்றாரில்லை. என்றுமுள்ள நித்யர்கள் என்று, நாம் நம்மை அறிந்தோமில்லை. ஓடிக்கொண்டிருக்கும் பிரபஞ்ச பிரவாகத்தை நித்யமென்று நினைத்து, அதனால் ஸ்வயலாபம் கருதினவராய், குழந்தைகளுக்கு அவர்களின் இளமைப்பருவத்தில் ஏதேனும் ஒரு நன்மை புரிந்தாலும், ஆதரவு செய்தாலும், அதை

அதிகமாக நினைத்து, அதற்கு நேராகத் தக்கவாறு குழந்தைகள் நமக்கு உபஹாரம் செய்யவில்லையே என குடில சிந்தையைக் கொள்ளுகிறோம்.

4. நம்முடைய குழந்தைகளின் ஹிருதயங்களில் பெரியவர்கள் மேல் பக்தி விச்வாஸம் என்ற நல்ல சிந்தை உண்டாகவேண்டுமென்று கருதினுல், இந்த உயர்நலம் பிள்ளைகளிடம் அமையும்படி பெற்றோர்கள் நேர்மையாய் பால்யத்தில் அவர்களை நடத்தவேண்டும். மாதா, பிதாக்களிடம் பக்தி சிரத்தை வைத்தலைவிட வேறு அழகான உயர்நலமமைந்த ஸம்பத்து புத்திரனுக்கு இன்றும். இத்தன்மையான ஸம்பத்து பிள்ளைகளிடம் அமைதலுக்கு, பெற்றோர்கள் என்ன விதமான முயற்சி தான் செய்யக்கூடாது. இந்த ஒரு ஸம்பத்து பிள்ளைகளிடம் ஏற்படுமாகில் அவர்கள் தீர்களாகவும், பலமுள்ளவர்களாகவும், சாந்தர்களாகவும், கௌரவமுள்ளவர்களாகவும், ஸத்ய ஸந்தர்களாகவும் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் நடப்பார்கள் என்பதில் ஸந்தேஹமில்லை. பெரியாரிடம் அன்பு வைத்தல் என்ற பக்தியானது, மநத்தில் உதயமாகிறதற்கு முன் பக்திபாராட்டப்படும் வஸ்துவினிடத்தில் ஈச்வராம்சம் உளது என்ற உணர்வு குழந்தையின் மநத்தில் உண்டாகவேண்டும். குழந்தைகளின் கண்களுக்கு இவ்விதமாய் ஈச்வரன் பிரஸந்நமாவர். எங்கே பெரியாரிடம் பக்தி இருக்கிறதோ, அங்கே ஈச்வரன் பிரஸந்நமாகிறுர். "நான் உன் பிதா, அதனுல் நீ என்னை வணங்கவேண்டும்." என இவ்விதம் ஒருவன் சொல்லுகிறதாக இருந்தால் அவன் அறிவீனம் எத்தன்மையது! இத்தன்மையான பிதாவினிடத்தில் ஈச்வர ஸந்நிதாநம் எப்படி விளங்கும்! பிதாவின் ஒழுக்கமே ஈச்வரஸந்நிதாநத்தை மறைக்கின்றது. பிதா தன் ஒழுக்கத்தைத் தூய்மைப்படுத்திக்கொள்ளவேண்டும். பின்பு புத்திரனின் திருஷ்டியில், பிதாவுக்குத் தெரியாமலே, ஈச்வர ஸந்நிதாநம் பிதாவினிடம் பிரகாசிக்கும். புத்திரன் உத்ஸாஹத்துடன் அதைப் பார்த்துக் களித்து அதன் உயர்நலத்தைக் கண்டு, அதற்கு வந்தநம் செய்வான், பக்தி பாராட்டுவான். இந்த பக்தியின் பயனுய் தன்னைவிட மேலானவரான தன் பெற்றோரிடம் தான் கண்ட ஈசுவராம்சத்தின் காட்சியானது மேன்மேலும் விரியும்; அகலும். பின்பு எல்

ஸர் ரூபங்களிலும் இப்போது குப்தமாயிருக்கின்ற ஈச்வராம்சத்தைப் பார்க்கும்படியான தகைமையைப் பெறுவான். இதனால்; எல்லா வஸ்துக்களினிடமும் ஏகீபாவ உணர்வு அதாவது ஸர்வபாவாபத்தி என்ற உயர்நலமமைந்த லக்ஷ்யத்தை நோக்கி நாம் செல்லுகின்ற யாத்திரையில் முதல் படிப்பினையாகச் சில உண்மைகளைத் தெரிந்து கொள்ளுகிறான். ஏனெனில் பரமாத்மாவின் ஸந்நிதானத்தைப் பிறரிடம் பார்ப்போமாகில் அந்தப் பரமாத்மாவின் அம்சர்களாக நாமும் இருக்கின்றோம் என்ற ஞானம் நம்மிடத்தில் உதயமாகும். பிரபஞ்சத்தில் உள்ளதும் நம்மிடத்தில் உள்ளதுமான அந்தப் பரமாத்மா ஒன்றே என நாம் மெய்யுணர்வு பெறுவோம். இந்த ஒருமையுணர்வு ஹிருதயத்தில் கொஞ்சம் உண்டாகவேண்டும். அப்போது தான் வேற்றுமைப்படுத்தும் இயல்பினவாகிய பல நடபடிக்கைகளின் சக்தி குறையும்.. வேற்றுமைப்படுத்தும் உடல்களைத் தவிர்த்து, அவைகளின் கண் இயங்கும் பிராணன் ஒன்றே என்ற ஒருமையுணர்வை மனத்தில் பதிப்பிக்கவேண்டும். பிறரைப்பற்றி நிந்தனையாகவும் ஏளனமாகவும் வம்பாடும்போது பிறரிடமும் நம்மிடமும் உள்ள ஆத்மா ஒன்றே என்ற உண்மையை உணர்வோமாகில் அத்தன்மையான வம்பு எவ்வளவு அற்பமானதாகவும் அறிவீனமானதாகவும் தோன்றும்! பிறரைப்பற்றி வீணாய் வம்பாடுகிறவனை உண்மையில் உலகில் ஸஹோதர பாவம் நிகழ்ச்சியில்லை எனக் கருத்துக்கொண்டவனாகவே மதிக்கவேண்டும்: உலகத்தில் ஸஹோதரபாவ நிகழ்ச்சி என்ற தர்மம் எவ்வித ஸந்தேஹத்திற்கு மிடமில்லாமல் இருக்கின்ற உயர்ந்த தர்மமாம். அந்தத் தர்மத்தை மறந்து பிறரைப்பற்றி வீண்வம்பு பேசுங்காலத்தில் உண்மையில் எவ்வளவு சிறியவராக நாம் தோன்றுகிறோம்! நம்மைச் சுற்றுமுள்ளவர்களின் ஸுகம், ஸந்தோஷம், கௌரவம், துக்கம், அவமானம் இவைகளில், நாமும் பங்காளிகளாக ஆகக்கடவோம் என ஒருமை யுணர்வின் ஞானத்தினால் அறிகிறோம்.* இப்படியிருக்க, வீண் கர்வம் ஏன்? பிறரை

---

* i. யஸ்து ஸர்வாணி பூதாநி ஆத்மந்யேவாநுபஶ்யதி।
ஸர்வபூதேஷு சாத்மாநம் ததோ ந விஜுகுப்ஸதே॥

இதன்பொருள்:—எவன் ஸமஸ்தமான பூதங்களையும் தன்னிடத்திலேயும் ஸகல பூதங்களிடத்திலும் தன்னையும் பார்க்கிறானோ, அவன் அப்ப

விட நாம் உயர்வானவரெனக் கருதல் எங்ஙனம்? பிறருக்கு ஹிம்ஸை உண்டுபண்ணுதல் எவ்வளவு அறிவின்மை? ஏனென்றால் பிறருக்குச் செய்யும் எத்தன்மையான ஹிம்ஸையும் கடைமுறையில் நம்முடையதன்றோ? உணவிற்கென்று பிராணிகளைக் கொல்லுகிறவனும் வேட்டையில் பிராணிகளைக் கொல்லுகிறவனும், தனக்குக் கீழாயினோரை ஹிம்ஸிக்கிறவனும், நிந்திக்கிறவனும் உண்மையில் தனக்கே துன்பத்தை விளைவிக்கின்றவனாக ஆகிறான். துன்பம் புரிகிறவனும், துன்பம் பெறுகிறவனும் ஒருவனேயென உணராத காரணத்தினால் இவ்விதம் நடைபெறுகிறான். உணவிற்காகக் கொல்லப்பட்ட பிராணியின் தீவ்ரவேதனையும், வேட்டையாடின மிருகத்தின் பயமும், வதையும், தன்னுடைய கொடூரமான அஹங்காரத்திற்கு உட்படும் கீழாயினோருடைய வெட்கமும், மனவர்த்தமும் இவையெல்லாம் தனக்கே திரும்பும்.

5. பிரியமுள்ள சில வஸ்துக்களில் ஈச்வரனுடைய விலாஸத்தைக் காணுந் தோறும் ஒருமையுணர்வு வர வர விருத்தியாகும். தான் வேறு என்ற எண்ணம் வர வர மங்கும். இன்சொலும் வாய்மையும் மேன்மேலும் வாலிபனின் சீலத்தில் அதிகமாகப் பிரகாசிக்கும். வாய்மையின் லக்ஷணம் இன்சொல்லும், இனிமையான ஸ்வபாவமுமாம். பொய்யானது கீழ்க்கடையான மனத்திற்குத் திருப்தியைக் கொடுத்தாலும் மேலான மனத்திற்கு அதிருப்தியைத் தரும். பொய் வசனம் மோசம்பண்ணும், பிரமையை உண்டு பண்ணும். அது ஆத்மாவை ஏய்க்கமுடியாது.

---

டிப் பார்ப்பதனால் தயை அல்லது நிந்தை ஒன்றுங் கொள்ளுகிறானில்லை.

ii. யஸ்மிந்ஸர்வாணி பூதாநி ஆத்மைவாபூத்விஜாநத:।
தத்ர கோ மோஹ: க: சோக ஏகத்வமநுபச்யத:॥

இதன்பொருள்:—எந்த ஆத்மஸ்வரூபத்தில் அல்லது எந்தக்காலத்தில் ஸமஸ்தமான பூதங்களாக ஆத்மாவே ஆனானோ அந்த ஆத்மஸ்வரூபத்தில் அல்லது அந்தக் காலத்தில் "ஒன்று" என்பதைப் பார்ப்பவனுக்கு மோஹம் ஏது? சோகம் ஏது?

ஒரு பெரியார் அடியில் வருமாறு உபதேசிக்கிறார்:—

**"மோசம் போகாதேயுங்கள். ஈச்வரனை ஏய்க்கமுடியாது. நீங்களெதை விதைக்கிறீர்களோ அதைத்தான் அறுப்பீர்கள்."**

ஒருவனுக்கு நாம் சொல்லுகிற பொய் தத்ஸமயம் அவனைத் திருப்தி பண்ணலாம். ஆனால் அவனிடமுள்ள ஆத்மா பொய்யைக் கண்டு கூசும், உள்நோக்கும். நம்மைக் கண்டால் உத்ஸாகத்துடன் ஒருவரும் நம்மை விரும்பார். பலரிடம் இருந்தாலும் அவர்களிடம் அந்யோந்யமாயிராமல் ஸஹோதர பாவத்தையிழந்து தனிமைப்பட்டு நடமாடுவோம்.

6. **பக்தி** என்ற ஒரு விஷயத்தை ஆரம்பித்து அதினின்று வெகு தூரம் விலகி, வேறொன்றைப்பற்றிச் சொல்லுகிறது போல் உங்களுக்குத் தோன்றும். உண்மையில் பக்தி என்பதின் ஹிருதயத்தைச் சொன்னதாக, அல்லது, சொல்ல முயன்றதாக நீங்கள் அறியவேண்டும். ஒருவனுடைய ஹிருதயத்தில் **பக்தி** என்ற ஸம்பத்து ஸ்திரமாக ஏற்படுமாகில், மலையில் வைத்த விளக்குப்போல் அஃது அவனை ஸந்மார்க்கத்தில் நடத்தும். அதனால் குழந்தை, வாலிபன், மனிதன், ஸ்திரீ, புருஷன் எல்லோரும், தம்மிடம் இன்றியமையாமல் பெறவேண்டிய ஸம்பத்து பக்தி யென்பதே என்று முன்னர் வற்புறுத்திச் சொன்னோம். அதனால் தான், பெற்றோர்களை நாம் வேண்டிக்கொள்வது என்னவென்றால், குழந்தை ரூபத்தில் வஸிக்கின்ற ஜீவாத்மாவின்கண் குப்தமாயுள்ள, பிரியம் என்ற தன்மை விருத்தியாவதற்கு ஏற்ப, நீங்கள் ஒழுகிக்காட்டவேண்டும்.* குழந்தைகளும், வாலிபர்களும் பக்தி பாராட்டுதலை ஏற்கும் பெரியவர் இல்லாத குடும்பம் மிகவும் துரதிர்ஷ்டமுள்ளது தான். கிருஹத்தின்கண் பக்தி ஸம்பத்தை உண்டுபண்ணக் கூடியவர்கள், அல்லது பொருள்கள் இல்லாமற் போமாயின், பக்திக்குரிய பொருளை வெளியில் தான் தேடவேண்டும். அவ்விதம் தேடுவதில் சிசுவின் மநம் படும் துயரம் என்னவென்று சொல்லுவோம். அதன் மநம் ஆதரவில்லாத இளங்கொடி போல் அங்கு மிங்கும் தத்தளிக்கும்.

---

* ஆநந்தமய கோசத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்கிற இடத்தில் "ப்ரியமேவ ஶிர:" என்ற தைத்திரீய உபநிஷத்தின் உபதேசம் இங்கு கவனிக்கத்தக்கது.

உலகத்தைப் பயங்கரமாகவும் வியஸநகரமாகவும் உண்டுபண்ணும் மந ஏக்கம் குழந்தைக்கு உண்டாகும். வெளியில் பேரன்பாகிய பக்தி பாராட்டக்கூடிய பொருளை ஜீவாத்மா நாட அதற்கேற்ப அப்பொருள் கிட்டாத பக்ஷத்தில் துயரமுறுவான், ஏக்கமடைவான். பின்பு, அத்துயரம் கோபமாகவும் அஹங்காரமாகவும், இறுமாப்பாகவும், மமதையாகவும், குரூர மாகவும், இவைபோன்ற மநத்தாங்கல் அல்லது தீயசுபாவங்களாகக் குழந்தையின் சீலத்தில் வெளிப்படும். தவிரவும் அத்துயரம், நாமரூபங்களான எல்லா வஸ்துக்களும் மூலகாரணமானது ஒன்றினின்றே உண்டாகின்றனவென்றும் அவைகளெல்லாவற்றையும் உயிர்ப்பிக்கும் பிராணகலை ஒன்றென்றும், மெய்யுணர்வு பெறாதநிலையில், "நீவேறு நான்வேறு" என்ற பிருதக் பாவத்தை விருத்திபண்ணும், நாநாவிதமான எண்ணங்களுக்கு மூலகாரணமாக அமையும்.

7. உலகத்தின் சமயசாஸ்திரங்களிலுள்ள ஞான உபதேசம் அதை அநுஷ்டித்துக்காட்டும் உதாரணமான புருஷன் இல்லாவிடில் குழந்தையின் மநத்தில் படியாதாம்; அது வெறும் வார்த்தையாக அமையும். ஜீவன் விட்டுப் பிரிந்த பிரேதமானது உற்றார், உறவினர்களுக்கு எவ்விதம் பயன்படாதிருக்குமோ அவ்விதம் அவ்வுபதேசமுமாகும். பௌத்தமதம், ஹிந்துமதம், மஹம்மதியமதம், கிறிஸ்துமதம் முதலிய எல்லாமதங்களும் பக்தி என்ற ஸம்பத்தை உபதேசிக்கும் தான். மாதா பிதாக்கள் தம்மிடம் தம்மக்கள் பக்திபாராட்டும்படியாக தாம்நடைபெறாராகில் அவ்வுபதேசத்தால் என்ன பயன்? பிறரிடம் பேரன்பாகிய பக்தியைப் பாராட்ட விரும்பாத ஒருவரும் மனிதஜீவவர்க்கத்தில் இல்லை. அதுமாத்திரமன்று; எந்த ஜீவவர்க்கத்திலேயும் இல்லையென்னலாம். பிரியத்தை உண்டுபண்ணக்கூடிய வஸ்துவை ஒருமுறைபார்த்தால் தக்ஷணமே அதன்பால் மநநெகிழ்ச்சியாகிய அன்பு நிகழும். ஆகையால், ஒவ்வொரு பெற்றோரும் தம்முடைய உத்தரவாதத்தை உணர்க. தம்முடைய குழந்தை தம்மிடத்தில் அன்புபாராட்டவும் தம்மைக்கண்டால் நலமமைந்த உத்ஸாகம்பெறவும் தாம் ஒழுகவேண்டும். பக்தி என்பது மனிதனுடைய ஹிருதயத்தில் நிலைபெறுமாகில் எல்லாநலமுமுண்டாகும்.

(இன்னும் வரும்.)

விசாலாக்ஷி அம்மாள்.

## வேதாந்த தர்சநத்தின் உயர்லக்ஷியம்.

அத்வைதவேதாந்தத்தைப்பற்றி உண்மையான அபிப்பிராயம் இதுவென வங்காளி ஒருவர் செய்த உபந்யாஸத்தின் சில முக்கிய அம்சங்களை இதில் தெரிவிப்போம். **பிரஹ்மம் ஸத்யம் ஜகந்மித்யை. ஜீவன் பிரஹ்மமே, வேறல்ல.** இதை வேதாந்தத்தின் கொள்கையாகச் சொல்லுகிறதுண்டு. இந்த வாக்கியங்களில் வருகின்ற பதங்களைச் சரியானபடி அர்த்தங்கொள்ளாமல் விபரீதமாக அர்த்தங்கொண்டு வேதாந்திகள் மாயாவாதிகளென்றும், வீண்மனோராஜ்யம் செய்பவர்களென்றும், காட்டுக்குப் போய் தபஸ் செய்யவேண்டியவர்களென்றும், உலகத்திலிருக்கிறவர்கள் அல்லர் என்றும், மநப்பால்குடிக்கிறவர்களென்றும், இன்னும் பலவிதமாய்ப் பிசகாய்க் கருதப்படுகின்றார்கள். மேற்படி வாக்கியங்களின் சரியான அர்த்தம்:—"**பிரஹ்மம் ஸத்யம்**" தேசம், காலம், காரணகார்யபரம்பரை இவைகளால் பாதிக்கப்படாமல் உள்ள வஸ்து எதுவோ அது **ஸத்யம்**. அதுவே பிரஹ்மம். அதுவே பிரபஞ்சத்திற்கு அதிஷ்டாநம். எவ்விதமான விகாரத்திற்கும் உட்படாதது. **ஜகந்மித்யை. மித்யை** என்பது, ஸத்யத்திற்கு எதிர்மறை, சூந்யமன்று, தேச கால காரண கார்ய பரம்பரைகளுக்குட்பட்டது. தேச கால காரண கார்ய பரம்பரைகளுக்குட்பட்டு மாறிமாறித் தோன்றும் இயல்பினது, பாரமார்த்திக நிலையில் **ஜகத் இலது**. வியவஹாரதசையில் **ஜகத் உளது**. இதுதான் மாயைக்குட்பட்டது என்று வேதாந்திகள் சொல்லுவார்கள். **மாயை** என்றால், ஒன்றுமில்லாத வெறுமையான தோற்றம் அன்று. பாரமார்த்திகதசையை அபேக்ஷித்து அது தோற்றமாகும். எது முக்காலத்திலும் எத்தேசத்திலும் தன்னிலும் மாறுதலுள்ளதாக இருக்கின்றதோ அது **மாயை**. சில உதாரணங்கள் இதை ரூபிக்கும். ஒரு மைல் தூரமென்று சொல்லுகிறோம். வாஸ்தவத்தில் ஒரு மைல் என்பது இல்லை. நாம் வைத்துக்கொண்ட தேசத்தின் சங்கேதம் ஒரு மணி காலம் என்கிறோம். ஒரு மணி காலம் என்பது வாஸ்தவத்தில் பிரபஞ்சத்திலில்லை. வியவஹாரதசையில் அது உண்மையானதுதான். இதுவும் நாம் ஏற்படுத்திக்கொண்ட சங்கேதமான பாவம். காலம் என்பது, சூரியசந்திரர்களின் கதியைப் பொறுத்தது. வானவில் தோன்றுகிறது. அது ஒரே இடத்தில் ஸ்திரமாகவிருப்பதுபோலத் தோ

ன்றும் அது பிரவாகநித்தியம் என்பதற்கு உற்ற உதாரணம். ஜீவன் பிரஹ்மமே, வேறன்று. இதன் தாத்பர்யம் என்னவென்றால், பரமாத்மா என்பது ஒன்றுண்டு. உலகத்தில் நிகழும் எல்லா ஜீவராசிகளும் அதன் வியக்தப்படும் தோற்றமே. அஃதுஇன்றி ஒன்றுமில்லை. அதைவிட அந்யதாவாக வேறொன்றில்லை. "அன்றி ஒன்றில்லை" என்ற மாணிக்கவாசகரின் வசநம் இங்கு கவனிக்கத்தக்கது. ஜீவாத்மா பரமாத்மாவின் தோற்றமே. "உன்னிடமிருக்கும் பிரக்ஞையும் என்னிடமுள்ள பிரக்ஞையும் எல்லாரிடமும் இருக்கின்ற பிரக்ஞையும் ஒன்றே." ஸ்தாவரம், ஜங்கமம், மனிதன் எல்லாம் பிரக்ஞாநத்திலேயே பிரதிஷ்டை பெறுகின்றன. பிரக்ஞாநம் ஒன்றே உளது "பிரக்ஞாநம் பிரஹ்மா" என்பது ஐதரேய உபநிஷத் வாக்யம். ஒரே பிரக்ஞையானது நாநாவிதமாய்ப் பிரகாசிக்கின்றதென்பதை அடியிற்கண்ட உபநிஷத் வாக்யம் உபதேசிக்கின்றது.

"𑌨 𑌤𑌤𑍍𑌰 𑌸𑍂𑌰𑍍𑌯𑍋 𑌭𑌾𑌤𑌿 𑌨 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌂
𑌨𑍇𑌮𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌤𑍋 𑌭𑌾𑌨𑍍𑌤𑌿 𑌕𑍁𑌤𑍋𑌽𑌯𑌮𑌗𑍍𑌨𑌿𑌃
𑌤𑌮𑍇𑌵 𑌭𑌾𑌨𑍍𑌤𑌮𑌨𑍁𑌭𑌾𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌂
𑌤𑌸𑍍𑌯 𑌭𑌾𑌸𑌾 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿"

கடோபநிஷத் 5-ம் வல்லி 15-வது சு.

இதன் பொருள்:—"அந்தப் பிரஹ்மத்தின் ஸந்நிதியில் ஸூர்யன் பிரகாசிக்கிறானில்லை. சந்திரன் நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கின்றனவல்ல. மின்னல்களும் பிரகாசிக்கின்றனவில்லை. அக்நியைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ. அதுவும் பிரகாசிக்கிறதில்லை. ஸகலமும் அதன் ஆதாரவுபற்றியே பிரகாசிக்கின்றன. எல்லாப் பிரபஞ்சமும் அதனுடைய காந்தியால் பிரகாசிக்கின்றன".

எல். சுப்பிரமணிய ஐயர்.

# திருமந்திர ஆராய்ச்சி.

1. மனிதர் அடைய விரும்பும் புருஷார்த்தமான பொருள் நான்கு. அவை தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்பனவாம். இவை தமிழில் அறம், பொருள், இன்டம், வீடு என வழங்கப்படும். இவற்றுள் வீடு (மோக்ஷம்) ஒன்றே பரம புருஷார்த்தம் என எல்லாச் சமயங்களும் வற்புறுத்திக் கூறுகின்றன. இத்திருமந்திரம் அம் மோக்ஷத்தை யடைதற்குரிய பரம்பராஸாதநங்களையும், ஸாக்ஷாத் ஸாதநத்தையும் மிகவும் வற்புறுத்திக் கூறுவதாகும்.

2. நந்தேசத்தில் ஸநாதந தர்மமென்று பெயர் பெற்றுள்ள ஹிந்து சமயமானது வேதத்தை முதல் நூலாக உடையது. வேதம், ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என நால்வகைத்தாம். ஒவ்வொன்றும் கர்மகாண்டம், உபாஸநாகாண்டம், ஞாநகாண்டம் என மூன்று காண்டங்களையுடைத்தாம். ஒவ்வொன்றும் மந்த்ரம், பிராஹ்மணம், உபநிஷத் என மூன்று பிரிவுடையது. ஞாநகாண்டமே உபநிஷத்துக்களாம். கர்மகாண்டம் உலக ஸ்ருஷ்டி விஷயத்தைப் பிரதிகப்படுத்தியும், ஜீவனின் யோக முறைகளைப் பிரதீகப்படுத்தியும் நடைபெறுகின்றது. யாகமென்பது யோகத்தின் பிரதீகமே. இதைப் பற்றிப் பின்னர் வியவஹரிப்போம். அந்த யோக முறைகளே மீண்டும் ஆலயங்களாகவும், அவற்றின்கணுள்ள மூர்த்திகளாகவும், அவற்றின் சம்பந்தமான ஆராதனைகளாகவும் பிரதீகப்படுத்தப்பெற்றுள்ள ஆகமங்களென்னும் தந்த்ரசாஸ்த்ரங்கள் அமைந்திருக்கின்றன. வேதத்தின் ஒரு பகுதியாகிய பிராஹ்மணங்களினின்றும் இவ்வாகமங்களுண்டாயின என்பது அறிஞர்களின் அபிப்பிராயம்.

3. ஆகமம் சாக்தம், சைவம், வைஷ்ணவம் என மூவகைத்தாம். எல்லா ஆகமங்களும், ஈசுவரன், ஜீவன், ஜகத் அதாவது பதி, பசு, பாசம் என்ற மூன்று பதார்த்தங்களைப் பற்றியும், பதியை யடையும் முறைகளான சரியை, கிரியை, யோகம், ஞாநம் எனும் நான்கு பாதங்களைப் பற்றியும் விஸ்தாரமாயுபதேசிக்கின்றன. ஆகமங்கள் ரஹஸ்ய சாஸ்த்ரங்களாம். அவற்றுள் முக்யமாக, யோக, ஞாந பாதங்கள் மஹா ரஹஸ்யமாகவே இருந்திருக்கின்றன. இது

காறும் அவை குரு சிஷ்ய முறையில் மாத்திரம் உபதேசிக்கப்பெற்று நடைபெற்றுவந்தன. இப்போது தான் அவற்றின் சம்பந்தமான ஏடுகள் வெளிவருவனவாயின. அவற்றுள் சில அச்சிற் பதிக்கப் பெற்றும், சில பதிக்கப் படாமலும் இருக்கின்றன. இவ்வாகமங்களுள் வைஷ்ணவ ஆகமங்கள் 108. அவற்றுள் வைகாநதம், பாஞ்சராத்ரம், பத்ம ஸம்ஹிதை, லக்ஷ்மீதந்த்ரம் இவை முக்யமானவை. சாக்த ஆகமங்கள் 77. அவற்றுள் (1) சுபாகமங்கள் 5, (2) கௌலாகமங்கள் 64, (3) மிச்ர ஆகமங்கள் 8. இவற்றைப் பற்றி விஸ்தாரமாக ஸௌந்தர்ய லஹரீ என்னும் நூலின் லக்ஷ்மீதரரின் பாஷ்யத்தின்கண் அறிக.

4. சைவ ஆகமம் மூவகைத்தாம்:—(1) லகுலீசபாசுபதம்: இது கூர்ஜரத்தில் வழங்குவது; (2) பிரத்யபிக்ஞாபாசுபதம்: இது காச்மீர தேசத்தில் வழங்குவது; (3) சைவஸித்தாந்தம்: இது தென்னாடாகிய நம் நாட்டில் வழங்குவது. முன்னவை இரண்டிற்கும் அளவிறந்த ஆகம கிரந்தங்கள் இருக்கின்றன. சைவ ஸித்தாந்த மென்னும் பாசுபத மதம் 28 ஆகம சாஸ்திரங்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றது. உபநிஷத்துக்களுள் பிரபலமான தசோபநிஷத்துக்கள் நீங்கலாகப் பெரும்பான்மையானவை இவ்வாகம சாஸ்திரத்தின்கண் விவரிக்கப்பட்டுள்ள யோக முறையையே விஸ்தரிக்கின்றன. இவ்வுபநிஷத்துக்களுக்குள் 27 மிக முக்யமானவை. ஷை ஆகமங்களுள் ரௌரவ ஆகமம், பாபவிமோசந பக்ஷத்தினுள்ள 12 சூத்திரங்கள் சிவஞானபோதம் எனப்படும். அதைக ஸ்ரீமெய்கண்டதேவர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அதற்குச் சிவஞானயோகிகள் விரிவான பாஷ்யம் தமிழில் எழுதியிருக்கின்றார்கள். இது சார்பாக அநேக நூல்கள் தமிழில் ஏற்பட்டிருக்கின்றன. சிவப்பிரகாசம் என்று வழங்கிவரும் சைவஸித்தாந்த நூல் வடமொழியில் அப்பெயருள்ள நூலின் தமிழ்மொழி பெயர்ப்பாம்.

5. மூன்று பதார்த்தங்கள் அல்லது தத்வத்ரயங்களைப் பற்றி ஆகமங்கள் கூறுகின்றன. அவையாவன:—

(1) பதி: ஸ்வதந்த்ரமான, என்றும் எங்கும் உள்ள சைதந்ய வஸ்துவான புருஷன். அவருடன் எப்போதுமுள்ள சக்தி ஒன்

றுண்டு. (2) பசு: ஜீவன், க்ஷேத்ரக்ஞன். (3) பாசம்: பந்தம், இது முப்பான்மையது:—

i. அவித்யை அல்லது ஆணவமலம்; ஆத்மா ஸ்வதந்த்ரமாயும், அகண்ட பிரக்ஞையுள்ளதாயுமிருப்பினும், ஸ்வதந்த்ரம் அற்றதாகவும் கிஞ்சிக்ஞன் எனவும் நினைத்தற்குக் காரணமாகும் அவித்யை.

ii. கர்மமலம், பாசமலம்: அது ஜடமான சரீரத்துடன் சேதநமான ஜீவன் சம்பந்தப் படுவதால் ஏற்படுவதாகும்.

iii. மாயாமலம், பேதமலம்: ஜீவனை அவித்யையில் பந்தப் படும்படி செய்யும் தன்மையது.

ஜீவன் ஈச்வரனையடையும் முறையைத் தான் நான்கு பாதங்களான சரியை, கிரியை, யோகம், ஞாநம் என வகுத்திருக்கின்றார்கள். இம்முறை அதிகாரியின் அறிவின் தாரதம்மியத்திற்குத் தக்கபடி ஸோபாநக் கிரமமாக ஏற்பட்டுள்ளது.

6. ஜீவன் ஈச்வரனின் அம்சம், ஈச்வரனுக்கும் ஜீவனுக்குமுள்ள ஸம்பந்தம், அகண்டமான அக்கிக்கும் அதினின்றுண்டாகும் பொறிக்குமுள்ள சம்பந்தம் போல்வதாகும். ஜீவன், சரியை, கிரியை, யோகம் என்ற ஸாதநங்களால் ஞாநம் பெறுகின்றான். அப்படி ஞாநம் பெறுதலே ஈச்வரனை ஸாக்ஷாத்கரித்தலாம். கடைமுறையில் ஈச்வரனுக ஆதலாம். இது ஆகம சாஸ்த்ரங்களின் பரம ஸித்தாந்தம்.

**"சீவ னென்னச் சிவனென்ன வேறிலை
சீவ னார்சிவ னாரை யறிகிலர்
சீவ னார்சிவ னாரை யறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே."**

**"நானென் றுந் தானென் று நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந்
தானென்று நானென்ற தத்துவ நல்கலாற்
றானென் று நானென் றுஞ் சாற்றகி லேனே."**

**"பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
வோவியம் போல வுணர்ந்தறி வாளர்க்கு
நாவி யணைந்த நடுத்தறி யாமே."—திருமந்திரம்.**

அதுவே மோக்ஷம், அதுவே பரமபதம், அதுவே சாந்தநிலை, அதுவே ஸாயுஜ்ய பதவி. ஆனால் மோக்ஷம் என்றது உயர்வற உயர்நலம் அமைந்த நிலையாகையால், ஸாதாரண ஜனங்கள் அதனைத் தம் பிரக்ஞையால் கிரஹிக்க முடியாமை பற்றி ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாரூப்யம் என்ற கீழ்ப்படிகள் ஞானிகளால் ஸங்கல்பிக்கப் பட்டிருக்கின்றன. இச் சங்கற்பங்களுக் கிணங்க, பதி, பசு, பாசங்களைப் பற்றிய பாவங்கள் வேறுபட்டுச் சொல்லப்படுகின்றன. அவை கீழான அதிகாரிகளை உத்தேசித்தவைகள் என நினைக்கற் பாலன. ஆனால் ஆகமங்களின் பரம ரஹஸ்யமும் பரம சிரேயஸ்கரமுமான உபதேசம் "வஸ்து ஒன்றே, இரண்டல்ல." என்பதாம். அஃதாவது அத்வைதக் கொள்கை என்றே ஏற்படும். அத்வைத வேதாந்தத்தின் ஒரு விஷயமாகிய மாயையைப்பற்றி இந்நூலாசிரியரின் அபிப்பிராயம் இதுவாம். பாரமார்த்திக நிலையென்றும், வியவஹாரிக நிலையென்றும், இரண்டு நிலைகளினின்று பார்க்கும்போது இருவித பாவம் ஏற்படும். சூந்யம் என்பது மாயையின் பொருளல்லவென்று பின்வரும் பாசுரங்களால் தெரியவரும்.

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே."

"பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணந்
தன்னை மறைத்தது தன்கரணங்களாந்
தன்னின் மறைந்தது தன்கரணங்களே."—திருமந்திரம்.

இதுவே ஸ்ரீ சங்கராசார்யர் அவர்கள் கொள்கையென அறிஞர்கள் ஒப்புவார்கள்.

7. பிரபலமான 10 உபநிஷத்துக்கள் வேதத்தின் பரம ரஹஸ்யமான தத்துவத்தை உபதேசிக்கின்றன. இதுவே வேதாந்தம் எனப்படும். அதன் பரம ஸித்தாந்தம் நான்கு மஹா வாக்கியங்களால் ஏற்பட்டிருக்கின்றன.

(1) ப்ரஜ்ஞாநம் ப்ரஹ்ம। (3) தத்த்வமஸி।
(2) அஹம் ப்ரஹ்மாஸ்மி। (4) அயமாத்மா ப்ரஹ்ம।

32 வித்யைகள் என்ற உபாஸனைகளும் யோகமும் (முக்கியமாக பதஞ்சலியார் யோகம்) ஷை மஹாவாக்ய ஸித்தாந்தங்களை ஸாக்ஷாத்கரிப்பதற்கு முக்கிய ஸாதனங்களாம். நடுநிலைமையினின்று சரியாய் ஆராயுங்கால் ஆகமங்களின் துணிபும், வேதாந்தமென்று சொல்லப்படும் உபநிஷத்துக்களின் துணிபும் ஒன்றேயாம்: அறியாமையால் வேற்றுமைப் படுத்திச் சொல்லுகின்றோம். பின்வரும் பாசுரத்தால் இவ்விரு துணிபுகளுக்கும் உள்ள வேற்றுமையின்மை நன்கு பிரகாசிக்கும்:

"வேதமோ டாகம மெய்யா மிறைவனூ
லோதுஞ் சிறப்பும் பொதுவுமென் றுள்ளன
நாத னுரையவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே."—திருமந்திரம்.

வேதம் பொதுவென்றும் ஆகமம் சிறப்பு என்றும் ஷை பாசுரத்தில் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. வேதத்தினுள் ஆகமம் அடங்கும். "வேதத்தை, ஒரு பெரிய வட்டமாக ஸங்கல்பித்துக் கொள்ளுவோமானால், ஆகமம் அதனுள் அடங்கும் ஒரு சிறு வட்டமாம்" என்பது ஷை பாசுரத்தின் உண்மையான பொருள் என்று ஒரு திருஷ்டாந்தத்தால் தெரிவிப்போம். ஒரு வாயகன்ற பாத்திரத்தில் ஜலத்தை வைத்து அதன்மேல் ஸூர்யன் பிரகாசிக்கும்படி செய்வோம். சலநமில்லாமல் ஜலமிருக்குமானால், அதனருகிலுள்ள சுவரில் படும் ஸூர்யனின் பிம்பம் வட்டமாகவும் தெளிவாகவுமிருப்பதைக் காணலாம். அப்பாத்திரத்தைத் தட்டினால் அல்லது அதனுள் ஒரு கல்லைப் போட்டால்; ஒரு சிறு அலை ஜலத்திலேற்படும்: இப்பொழுது சுவரில் படும் ஸூர்யனின் பிரதிபிம்பம் வட்டமாகத் தோன்றாமல் மாறி மாறிக்கொண்டே பலவித விநோதக் காட்சிகள் சுவரில் காணப்படும். ஒரு அலையின் காரியமாக ஆயிரக்கணக்கான பிம்பங்கள் மாறிமாறித் தோன்றும். அலையானது ஸ்வரமாம். அது மந்த்ரமாகிய வேதத்தை உவமித்துக்காட்டும். பல்வாறான பிம்பங்களின் ஒரு உருவம், ஒரு பாகம் தந்த்ரமாகிய ஆகமம் என்று நினைக்கத்தக்கது. வேதம் மந்த்ரம், ஒலிவடிவு. ஆகமம் தந்த்ரம், வரிவடிவு: ஒலிவடிவு உயிராம்: அதனால் உயர்வாம். வரிவடிவு உடலாம். அதனால் முன்னதை உத்தேசிக்கத் தாழ்வாம்: இதனால்தான் இந்நூலுக்குத் திருமந்திரம் என்றும்; இதனுள் அடங்கி வருகின்ற 9 அதிகரணங்களுக்குத் தந்த்ரங்கள் என்றும் பெயர்கள் இடப்பட்டன போலும்;

8. சரியானபடி சித்தசுத்தியுடனே வேதத்தை முறையாய் உச்சரித்தால் தேவர்களை உண்டுபண்ணலாம். புவநங்களைச் சிருஷ்டிக்கலாம். ஈசுவரனின் சின்மாத்திரையே பரவாக்கு. அதுவே பசியந்தி, மத்யமா, வைகரீ வாக்குகளாகப் பரிணமித்திருக்கிறது. வேதம் வைகரீ வாக்கு. அடியிற்கண்ட சுவேதாசுவதரோபநிஷத் வாக்யம் இதைச் சூசிப்பிக்கின்றது.

"ஒழுஜெவொ௯க்ஷரெ வாமெவெ்யாஜநு
யஸ்மிநெ்வாஅயிவிஸ்வெ நிஷெடிஃ:।
யஸ்ஷவெடகிஜெ்வாகரிஷ்ய்தி
யஉதூவிஉ-ஸ்ஊஉமெஸோஸதெ"

இதன்பொருள்—

நாசரகிதமான ரிக்சந்தஸ் என்ற உயர்தர காநபூமியில் வ்யோமந் என்ற பரம ஆகாசத்தில், எல்லாத்தேவர்களுமிருக்கின்றனர்கள். இவ்வுண்மையை யறியாதவன் வேத (ரிக்கு) கானத்தால் என்ன பயன்பெறுவான்? அதையறிந்தவர்கள்தான் உண்மையில் கிருதார்த்தர்களாவார்கள்,"

இக்காரணம் பற்றியே அர்த்தத்தைவிட ஸ்வரம் வேதத்திற்கு முக்கியம். அதனால், ஸ்வர பேதம் விபரீதத்தை யுண்டாக்கும். ஸாதாரணமான வைகரி ஸ்வரத்தாலுங்கூட கண்ணாடிப் பாத்திரங்களை உடைக்கலாம் என்று மேல்நாட்டு ஸ்தூல பிரபஞ்சத்தைப் பற்றிய சாஸ்திரவாயிலாக நாம் அறிவோம். வாராவதி முதலான கட்டிடங்களுக்கு ஒருவிதமான மூலஸ்வரம் (Fundamental Note) உண்டு. அதற்கு விரோதமான ஸ்வரம் அதை சம்பந்தித்து நிகழுமாகில் கட்டு விட்டு வாராவதி நாசமுறும். இக்காரணம் பற்றியே ஒரு சேனையை அணிவகுத்து நேர்மையாக வாராவதியின் மேல் நடத்தினால், அந்நடையால் ஏற்படும் ஸ்வரம் சில சமயம் அவ் வாராவதியின் மூலஸ்வரத்திற்கு விரோதமாகவிருக்குமாகில் வாராவதிக் கட்டிடம் தகர்ந்து விடும். இதை உத்தேசித்தே ஒரு சேனையானது அணிவகுக்கப் பெறாமலே பாலத்தின்மேல் நடக்கவேண்டுமென்பது விதி. இக்காரணம் பற்றியே வாராவதியின் மேல் குதிரையை ஓட்டாமல் நடத்திக்கொண்டு போகவேண்டுமென்ற விதியும் உள்ளது. இதனால் தான் மாம்ஸம், தமோகுண உணவு, பாநம் இவற்றை விலக்காதவர்களும், மநஸ் சுத்தம் பெறாதவர்களும் வேத மந்த்ரத்தை உச்சரிக்கக்கூடாது என்ற வியவஸ்தை ஏற்பட்டுள்ளது. இஃது அத்தியயனத்தின் க்ஷேமத்தை உத்தேசித்ததேயாம்.

(இன்னும் வரும்.)

மாதவன்.

# ஸ்ரீ சங்கர ஜயந்தி

---

நாளிது மேமீ 11உ / சித்திரைமீ 29உ ஞாயிற்றுக்கிழமை சுக்லபக்ஷம் பஞ்சமி திதி ஸ்ரீசங்கரபகவத்பாதரின் அவதார தினம். இத்தினம் நந்தேசமுழுமையும் அத்வைத சித்தாந்த ஸம்பிரதாயம் எங்கெங்கே நடைபெறுகிறதோ அங்கங்கே எல்லாம் புண்ணிய தினமாகக் கொண்டாடப்பெற்று வரும். இற்றைக்கு 2500 வருஷங்களுக்கு முன்னர் தென்னிந்தியாவில் (காலடி க்ஷேத்திரத்தில் என்பார் சிலர், காஞ்சீபுரத்தில் என்பார் வேறு சிலர்) ஸநத்குமாரர்களுள் ஜ்யேஷ்டரானவர் உலகத்தில் அவதாரமாயினர். இவரே லோககுரு ஸ்ரீ சங்கரபகவத்பாதர் எனப் பிரக்யாதி பெற்ற மஹாபுருஷர். இத்தேசமுழுமையும் ஸஞ்சாரம் செய்தனர். துராசாரமார்க்கங்களைத் தொலைத்தனர். ஞானமார்க்கத்தையும் ஸந்நியாஸ ஆச்சிரம தர்மத்தையும் ஸ்தாபித்தனர். சிருங்ககிரி, துவாரகை, ஜகந்நாதம் ஹிமாசலத்தின் கண் பத்திரி என்ற நான்கு இடங்களில், நான்கு ஸந்நியாஸி மடங்களை ஸ்தாபித்தனர். ஹிமாசலத்தில் பத்திரியிலுள்ள மடத்திற்கு ஜ்யோதிர் மடம் என்று பெயர். இந்நான்கு மடங்களிலும் ஸுரேசுவராசாரியர், பத்மபாதர், ஹஸ்தாமலகர், தோடகர் என்ற நாலு சிஷ்யர்களை மடாதிபதிகளாக நியமித்து தாம் ஸ்தாபித்த ஞானசம்பிரதாயத்தைப் பரவச்செய்திருக்கின்றனர். குரு சிஷ்ய ஸம்பிரதாயமுறையில் இந்நான்கு மடங்களிலும் வந்தவர்கள் ஸ்ரீசங்கராசாரியர் என்ற திருநாமத்தை வகித்துக்கொண்டு வருகிறார்கள். இந்நான்கு மடங்களில், ஜ்யோதிர்மடம் நீங்கலாக, மற்றைய மூன்று மடங்களும் நடைபெற்று வருகின்றன. ஜ்யோதிர்மடம் அரூபத்தையடைந்திருக்கிறது; அதை ஜீர்ணோத்தாரணம் செய்வதற்கு, பரத் மஹா மண்டலி என்ற சபையார் முயற்சித்துக்கொண்டு வருகிறார்கள்.

ஸ்ரீமத் ஆதி சங்கராசாரியர் அவர்களும் நான்கு சிஷ்யர்களும் சேர்ந்துள்ள படம் இப்பத்திரிகையின் முகப்பில் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

ப. ந.

# பிரஹ்மஞான தர்சனம் (பாலபாடம்)

## 1-வது அத்யாயம்.

### ஸநாதந ஞானமுறை.

1. வெகுகாலத்திற்கு முன் இவ்வுலகமானது இளமைப் பருவத்திலிருந்தபோது, அதாவது மனிதர்களும் ஸ்திரீகளும் தற்காலத்து மனிதர்களையும் ஸ்திரீகளையும்போலிராமல் முற்றிலும் வித்யாஸமாயிருந்தபோது ஒரே ஒரு மதம் நடைபெற்றது. அது உண்மையான மதமென்று ஸகலரும் அங்கீகரித்திருந்தார்கள். ஏனெனில் அக்காலத்திலிருந்த ஞான குருக்கள் தங்கள் சிஷர்களுடன் கலந்து தேவர்கள் போலிருந்தார்கள்.

2. அக்குருக்கள்மார் தெய்வத் தன்மையுள்ளவர்களாயிருந்தார்கள். உருவத்தில் தேவசரீர முள்ளவர்களாயும், உயரமான ஆகிருதி யுள்ளவர்களாயும், பரிசுத்தம், ஞானம், சக்தி, அருள் நிறைந்த காம்பீர்ய முள்ளவர்களாயும், ஜநங்களால் நியமநம் செய்யப் பெறாத, ஸ்வபாவத்திலேயே தேவாம்சம் பெற்ற அரசர்களாகவுமிருந்தார்கள்.

3. அவர்களுடைய அதிகாரத்தை ஆக்ஷேபிக்க யாரும் நினைத்தாரில்லை. அவர்களுடைய உபதேசத்திலும் அவநம்பிக்கை கொண்டாரில்லை. அரசர்கள் கற்பித்த விஷயங்களைத்தவிர வேறொன்றும் அவர்கள் அறிந்திலர். எல்லா விஷயங்களும் அக்காலத்தில் மதஸம்பந்தமாகவே இருந்தன. நாம் இக்காலத்தில் வித்யாசாலைகளிலும் ஸர்வகலாசாலைகளிலும் கற்றுக்கொள்ளும் சகல வித்தைகளையும் கலைகளையும், அவைகளுக்கு மேற்கொண்டும் அதிகமான வித்தைகளையும் அக்காலத்திய ஞானிகளான அரசர்கள் தங்கள் பிரஜைகளுக்குக் கற்றுக் கொடுத்துவந்தார்கள். இக்கால்த்து மனிதர்களோ அந்த ஸநாதந ஞானத்தை முற்றிலும் மறந்து விட்டார்கள். அந்த தெய்வத் தன்மையுள்ள அரசர்கள் இருந்தார்களென்பதைப் பற்றியும், அவர்களுடைய ஞானம், சக்தி, அருள், இவைகளைப்பற்றியும் போதுமான ஸாக்ஷ்யம் இருந்திருப்பதுந்தவிர, அது அடிக்கடி வெளிப்பட்டுக் கொண்டுமிருந்தபோதிலும், இக்காலத்திலுள்ளவர்களில் அநேகர் மேற்சொன்ன அரசர்கள் எப்போதாவது இருந்திருப்பதாகவே நம்புகிறார்களில்லை.

4. இதற்குத் திருஷ்டாந்தம்:—அநேக தீரர்கள் தம் ஆராய்ச்சியில் பூர்வீகத்தில் நடைபெற்ற ஆச்சரியமுள்ள நாகரிகத்தின் மேன்மை பொருந்திய சித்திர வேலைகளடங்கிய சிறந்த கட்டிடங்களை, அதாவது சின்னங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அக்கட்டிடங்களோ இக்காலத்தில் யாவராலும் கட்ட முடியாதவைகள்; வெகு

விஸ்தாரமும் உறுதியுமுள்ளவைகளாயும் மிக இருண்ட காடுகளின் மத்தியிலும், வனாந்தரங்களிலும் மறைந்திருந்தன. அவைகளைப் பார்க்கும்போது, பூர்வகாலத்துக்கும் தற்காலத்துக்கும் மத்தியிலுள்ள ஒரு வாயில் போலிருக்கின்றன. அவைகள் அநேக ஆயிரம் வருஷங்களில் காற்றினாலடிபட்டுக் கொண்டுவரப்பட்ட மணல்களினால் மேவப்பட்டு பூமிக்குள் புதைந்து கிடக்கிற நகரங்களாம். இவைகள் தவிர வெகு ஆச்சரியமான பாமியா பிரதிமைகளும் ஈஸ்டர் தீவிலுள்ள பிரதிமைகளுமிருக்கின்றன. அவைகள் பெரிய மனித உருவங்கள். அவைகளிற் சில இருநூறு அடி உயரமும், சில அறுபது அடிமுதல் நூறுஅடிவரை உயரமுமுள்ளவைகள். இவைகள் கிறிஸ்து பிறக்க அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னமே கற்களில் வெட்டப் பெற்ற சிலைகளாம்.

5. ஆதிகாலத்தில் இராக்ஷஸர்களிருந்ததாக விவிலிய நூலிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது பிரளயத்துக்கு முந்தின காலம். "நோவா" என்பவர் இருந்ததற்கு வெகு காலத்திற்கு முன் தெய்விக அரசர்களிருந்தார்கள். அவர்கள் இவ்வுலகத்தை விட்டுப் போன பிற்பாடும், அவர்கள் கற்றுக்கொடுத்த வித்தையை மனிதர்களும் ஸ்திரிகளும் மறந்துபோய் மூடர்களாயும் துன்மார்க்கர்களாயும் ஆன பிற்பாடுந்தான் பெரிய பிரளயமுண்டாகி அதில் "அட்லாண்டிஸ்" என்னும் கண்டம் அமிழ்ந்துபோயிற்று. அக்கண்ட மிருந்த இடம் இப்போது அட்லாண்டிக் மஹாஸமுத்ரமாக இருக்கிறது, அக்கண்டமமிழ்ந்துபோன பிற்பாடு ஒரேமதமாயிருந்த ஸநாதந ஞானமுறையானது பல மதங்களாகப் பிரிந்தது. அதுவே அநேக நூற்றாண்டுகளுக்கப்பால், மறுபடியும் தற்கால பிரஹ்மஞானதர்சந மென்ற பெயருடன் எல்லா மதங்களையும் தன்னுள் அடங்கப்பெற்று ஒன்றாக ஏற்பட்டிருக்கிறது.

6. தற்காலத்தில் உலகமெங்கும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற பிரஹ்மஞான ஸபையின் அநேக அங்கத்தினர்கள் அநேக ஆயிரவருஷங்களுக்கு முன் தெய்வத்தன்மை பொருந்திய அரசர்களால் கற்றுக்கொடுக்கப்பட்ட திவ்ய ஞானங்களைத் திரும்பவும் கற்றுவருகிறார்கள். அந்தஅரசர்கள் ஸநாதந ஞானம் என்ற வித்தை மனிதர்களின் மநங்களில் விதைத்தார்கள். அவ்வித்து வீண் போகவில்லை. அது வளரவேண்டுமென்று நமக்கு இச்சையிருந்தால் நம்முடைய மநங்களைப் பக்குவப்படுத்தி ஆயத்தமாக்கவேண்டும்.

(இன்னும் வரும்.)

வி. வெங்குசாமி ஐயர்.

# துகாராம் பாவாவின் சரித்திரம்.

(மூன்றாந்தொகுதி 388-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

இவ்விதமாக ஊரூராகத் திரிகையில் துகாராமருடைய மூன்று மாடுகள் மரணமடைந்தன. அவருடன் கூட இருந்தவன் துகாராமரே கொன்றுவிட்டதாக புரளிபண்ணிவிட்டான். தேஹூ நகரத்துக்கு துகாராம் வந்தவுடன் கண்டவனெல்லாம் அவரைத் தூஷிக்க ஆரம்பித்தான். நிஜத்தைச் சொல்ல துகாராம் பிரயத்தினம் செய்தும் அவருடைய வார்த்தையைக் கேட்பார் யார்? சாதுக்களை உபத்திரவிக்க கொஞ்சம் காரணம் போதும். ஊரிலிருப்பவர்கள் எல்லாரும் அவரை நாநாப்பிரகாரமாக ஹிம்ஸிக்க ஆரம்பித்தார்கள். எல்லாரும் தன்னிடத்தில் அப்பிரியமாயிருப்பதைக் கண்டு துகாராமருக்கும் மன வருத்தமுண்டாயிற்று. எவர்களிடத்தில் கடன் வாங்கி வியாபாரம் செய்ய ஆரம்பித்தாரோ அவர்கள் என்ன சொல்ல ஆரம்பித்தார்களெனின், இந்த பைத்தியகாரன் விட்டல் பக்தியில் முழுகியிருக்கிறான். ஜனங்களிடத்தில் கடன்வாங்கி வியாபாரம் செய்ய ஆரம்பித்தவன் கெட்டிக்காரத்தனமாயும் ஹுஷாராயும் வியாபாரம் செய்து கடனைத் தீர்க்க வேண்டியதாயிருக்க, அதைக் கவனிக்காமல் சாதுத்தன்மையை மேற்போட்டுக்கொண்டு கடன்காரர்களை மோசம் செய்கிறான். இப்படி ஒரு தடவையல்ல. அநேக தடவை செய்தும் இன்னும் புத்தி அடையவில்லை. ஊரில் எல்லாரும் தன்னை நிந்தித்தலும் குடும்பம் க்ஷீணதிசையை அடைதலும் ஒன்றும் துகாராமருடைய மனத்தில் ஏறவில்லை. ஆகையால் இவனுக்கு நல்ல புத்தி கற்பிக்கவேண்டுமென்பதாய் அவர்கள் நிச்சயம் செய்தார்கள். இப்படிச் செய்வதினால் கொஞ்சநிஞ்சம் ஸம்ஸாரத்திலிருந்த அபிமானமும் விட்டு துகாராம் அதிவிரக்தியை அடைந்தார்.

இந்த சமயத்தில் ஊரில் மழையில்லாமல் வெகு கஷ்டம் சம்பவித்தது. ஆகவே துகாராமருடைய குடும்பத்திற்கும் அதிக வருத்தமுண்டாயிற்று. இச்சமயத்தில் அவர் இரண்டு மூன்று மாடுகளை அதிகப்பிரயாசையுடன் சேர்த்து மிளகாய் மூட்டைகளை அவைகளின் பேரில் ஏற்றி அவைகளை விற்கும்பொருட்டு தென் கொங்கண

தேசத்திற்கு அவர் சென்றார். இப்போது அவருக்கு சம்சாரத்தில் அதிவிரக்தி ஏற்பட்டிருந்தது. அதை விட்டுவிட வேண்டுமென்ற நிச்சயம் அநேகமாய் ஆயிருந்தது- கொங்கணதேசத்தில் ஊரூராய்த் திரிந்து அந்த மிளகாய்களை அவர் விற்றார். ஆனால் இந்த வியாபாரத்தில் பிறருக்குச் சொல்லக்கூடியதான லாபம் வரவில்லை. சகல பிராணிகளிடத்திலும் ஒரே பரமாத்மாவென்ற பாவனையால் யார் எந்த விலைக்குக் கேட்டாலும் அதற்குக் கொடுத்து விடுவார். இப்படிச் சரக்கை விற்று வந்த பணத்துடன் துகாராம் திரும்புகையில் அவரை ஒரு அயோக்கியன் சந்தித்தான். இவருடைய நடபடிக்கையைப்பார்த்து தன்னுடைய சாமர்த்தியத்தைக்காட்ட இவர் சரியான மனிதன் என்று அந்த அயோக்கியன் நினைத்து அவருடன் கபடமான வார்த்தைகளைப்பேசி, ஐயா! இந்தத் தங்கக்காப்பை நீர் வாங்குவதாயிருந்தால் நான் விற்கச் சித்தமாயிருக்கிறேனென்று சொன்னான். இந்த நகையை வாங்கும்படியான பணம் தன்னிடத்திலில்லை என்று சொல்லி துகாராம் தன்னிடத்திலிருந்த பணத்தையும் காட்டினார். அப்போது அந்த அயோக்கியன், உம்மிடமிருக்கும் பணத்தைக் கொடும், பாக்கியைப் பிறகு கொடும். நான் உம்மை அறிவேன், உம்மிடத்தில் எனக்குப் பூர்ண நம்பிக்கை உண்டு என்பதாய்ச் சொன்னான். இதைக் கேட்டு இவன் மிகவும் யோக்கியன், இவனை திரஸ்காரம் செய்யக்கூடாது, தனக்கும் லாபமுண்டு, என்பதாய் துகாராம் நினைத்து தன்னிடத்திலிருந்த பணத்தை யெல்லாம் அவனிடத்தில் கொடுத்து விட்டார். இந்த வியாபாரத்தால் அதிக சந்தோஷ மடைந்து உடனே வீட்டுக்கு வந்து சேர துகாராம் புறப்பட்டார். இந்தத் தங்கத்தை வியாபாரிகளிடத்தில் கொடுத்து கொஞ்சம் கடனையும் அடைக்கவேண்டும், தன்னுடைய செலவுக்கும் கொஞ்சம் வாங்கிக்கொண்டு போக வேண்டும் என்றும் மநத்தில் நினைத்தார். துகாராம் திரும்பி வந்ததைக்கேட்டு அநேக வியாபாரிகள் அவரிடம் வந்து, என்னகொண்டு வந்திருக்கிறீர்? காண்பியும் என்று கேட்டார்கள். அப்போது துகாராம் மாட்டை வெளியே கட்டி, மூட்டையை அவர்கள் முன்பாக அவிழ்த்து, தங்கக்காப்பை அவர்கள் முன்பாக வைத்து, என்னிடம் இருந்த சகல பணத்தையும் கொடுத்து இந்தத்தங்கநகையை வாங்கி

யிருக்கிறேன், நீங்கள் எடுத்துக்கொண்டு உங்கள் கடனுக்கும் கொஞ்சம் செல்லவைத்துக்கொண்டு என் செலவுக்கும் கொஞ்சம் கொடுக்கவேண்டும் என்று துகாராம் கேட்டார். வியாபாரிகள் அதை வாங்கி பரீக்ஷைபார்த்து, பித்தளைக் காப்பின்பேரில் தங்கக் கில்ட்டு கொடுத்திருப்பதாய்த் தெரிந்துகொண்டார்கள். பிறகு அவர்கள் இவரை ஹேளனம் செய்து என்ன சொன்னார்களெனின், பைத்தியகார மனிதனே! அந்த அயோக்கியனை நம்பி மோசம் போனாயே, உன்னுடன் எங்களையும் மோசம் செய்கிறாய். நீ இறந்துபோனால் ஊருக்கு க்ஷேமம். எது வரையில் விடோபாவின் பக்தி செய்கிறாயோ அதுவரையில் உனக்கு இதுவேகதி; உன்சம்சாரம் நடப்பது நிரம்பக் கடினம். இப்படிச்சொல்லி ஆசையற்று வியாபாரிகள் தங்கள் தங்கள் வீடுகளுக்குப் போய்விட்டார்கள். இந்தச் சமாசாரம் வீட்டில் தெரிந்தவுடன் பெண்டுகள் மாரடித்துக்கொள்ள ஆரம்பித்தார்கள். அவர்கள் இவருடைய வரவை சாதகபக்ஷிபோல் எதிர்பார்த்து வந்தார்கள். வியாபாரம் செய்துவந்த பிறகு கொஞ்ச நாளைக்காவது வயிறு நிறைய சாப்பிடலாம் என்று ஆசைகொண்டிருந்தவர்களுக்கு, இந்த பகவத்பக்தன் மூழ்கிப்போனதைக் கேட்டவுடன் அதிக துக்கமுண்டாயிற்று.

துகாராமருக்குக் கஷ்டகாலம் அதிகப்பட்டது. வாங்கின கடனைக் கொடுக்காததினால் புதுக்கடன் கொடுப்பாரில்லை. இதிலும் விருத்தியோ விரக்தியில் பரிவஸனமாயிருக்கிறது. இப்படிப்பட்ட பயங்கர ஸ்திதி தன்னுடைய நாயகருக்கு வந்ததைப் பார்த்து அவருடைய இளைய ஸம்ஸாரமான அவலாயி அம்மாள் தான் போய் எங்கேபாவது கடன் வாங்கிக்கொடுக்க வேண்டியது என்று நினைத்து ஒரு சாவுகார்னிடம் போய், தன் பெயரால் பத்திரம் எழுதிக்கொண்டு கொஞ்சம் கடன் கொடுக்க வேண்டுமென்று கேட்டாள். இந்த அம்மாள் ஸ்ரீமானுடைய பெண், இவளுடைய சகோதரர்கள் பூநாவில் பெரிய சாவுகார்கள், இவளுக்குக் கடன்கொடுத்தால், அதை வசூல்செய்வதில் சிரமமில்லை என்று மநத்தில் நினைத்து அவளுக்கு இருநூறுரூபாய் அந்த சாவுகார் கொடுத்தான்; அதைக் கொண்டுவந்து தன் பர்த்தாவிடம் கொடுத்து, என் ஜவாப்தாரியின் பேரில், இந்தக் கடன் வாங்கியிருக்கிறேன், இதை வைத்துக்கொண்டு

நன்றாக வியாபாரம் செய்யும் என்று அந்த அம்மாள் சொன்னாள். இந்தப் பணம் கிடைத்தவுடன் துகாராம் தன் மாடுகளின் பேரில் உப்பு மூட்டைகளை ஏற்றி பாலேகாடாளென்ற விடத்துக்குப் போய்க் கொண்டிருப்பவர்களுடன் சேர்ந்து போனார். புறப்படும்போது அந்த அம்மாள், இதை நன்றாகக் காப்பாற்றும். இதையும் கெட்டுப் போக்கிவிட்டு வந்தீரேயானால் அந்த சாவுகாரன் என்னை விடமாட்டான். வழியில் யாசகம் செய்கிறவனையாவது அயோக்கியனையாவது கண்டால், அவனுக்கு ஒன்றும் கொடுக்கவேண்டாம். விடோபா பக்திபைத்தியத்தைக் கொஞ்சம் குறைத்து வீட்டிலுள்ளோர் உபவாஸம் செய்து மரிக்கிறார்கள் என்பதை மநத்தில் தரித்துப் பாரும், என்று சொன்னாள். இப்படி ஸம்ஸாரத்தினிடமிருந்து உபதேசம் பெற்று துகாராம் புறப்பட்டுப் போனார்.

கூடவந்தவர்கள் எந்த ஊரில் தங்கள் சரக்கை விற்றார்களோ, அந்த ஊரிலேயே தன் சரக்கு விஷயமாய் வியவஸ்தை செய்துவிட்டு அவர்களுடன் திரும்ப துகாராம் புறப்பட்டார். வழியில் ஒரு இடத்தில் அவர்கள் தங்கியிருக்கும்போது, அவ்விடத்தில் ஒரு பிராமணன் கழுத்தில் மரக்கலப்பையை மாட்டிக்கொண்டு யாசிக்க வந்தான். சில வியாபாரிகள் அவனை சுத்தமாய் திரஸ்கரித்துவிட்டார்கள். கொஞ்சம் தயாளுவாயிருந்தவர்கள் அவனுக்கு ஏதோ கால் அரைக்கால் கொடுத்து வழிகாட்டி விட்டார்கள். அவனைக் கண்டு துகாராமனுக்கு தயை ஜநித்தது. அவனைக் கிட்ட அழைத்து உட்கார வைத்துக்கொண்டு, விருத்தாந்தத்தை எல்லாம் சொல்லும்படி துகாராம் கேட்டார். அப்போது அந்தப் பிராமணன் சொன்னார்:—"என் சொத்தை என் தாயாதிகள் பிடுங்கிக்கொண்டார்கள். என்னையும் காராகிருஹத்தில் போட்டார்கள். பிறகு என் தரப்பில் சர்க்காருக்கு சங்கதிகளைச் சொன்னபிறகு என்னை விடுவித்தார்கள். அக்காலத்தில் நியாயம் அடைந்தவனிடம் பணம் சர்க்காரில் வாங்குகிறதுண்டு. அப்படி என்னை முன்னூறுரூபாய் கொடுக்கும்படி உத்தரவு செய்தார்கள். என்னிடமிருந்ததெல்லாம் விற்று 50 ரூபாய் கொடுத்தேன். பாக்கி சர்க்கார் பணத்தைக் கொடுக்கவேண்டியதாயிருக்கிறது. கூடவிருக்கிறவன்தான் சர்க்கார் சிபாயி. இவன் என்னுடன் இரவும் பகலுமிருக்கிறான். என்னை ஒரு நாழிகை கூட

போகவிடுகிறதில்லை. ஆகையால் நானும் என் ஸம்ஸாரமும் குழந்தைகளும் அங்குமிங்கும் யாசிக்கிறோம். மநத்தை வருத்தப்படுத்தும் படியான இந்த ஏழையின் விருத்தாந்தத்தைக் கேட்டு துகாராமருக்கு அதிக மநவருத்த முண்டாயிற்று. அப்போது அவர் சொன்னர்:—"நீர் ஒன்றும் யோசனை செய்யவேண்டாம். பாரும் என் கையில் 250 ரூபாயிருக்கிறது. அதைக் கொண்டுபோய் சர்க்கார் கடனைத் தீர்த்துவிடும். இப்படிச்சொல்லி அந்த ரூபாயை பிராமணன் கையில் கொடுத்தார். அப்போது அந்தப் பிராமணனுக்கு நிரம்ப ஸந்தோஷமுண்டாகி, துகாராமருடைய உபகாரத்தை அநந்தமாக மதித்தார். இந்த விலக்ஷணமான உதாரத் தன்மையைக் கண்டு கூடவிருந்த வியாபாரிகளுக்கு ஆச்சரியமுண்டாயிற்று. அவர்கள் அவரைப் பார்த்து பரிஹாஸம்செய்து, துகாராமரே! நீர்நல்ல தாதா! வீட்டில் குழந்தைகுட்டிகள் சோறு தின்ன வழியில்லாமலிருக்க, கடன்வாங்கி சரக்கு சேர்த்திருக்க, அதை இப்படி அழிப்பதா சரி? அவலாயிக்குத் தெரிந்தால் என்ன செய்வாள் என்று சொல்லி அவரை அங்கேயே விட்டுவிட்டுப் புறப்பட்டுப் போனர்கள். இங்கேயே துகாராம் ஒரு நாவிதனை வரவழைத்து அந்தப் பிராமணனுடைய தலைமயிரையும் தாடியையும் இறக்கும்படி செய்தார். அவனுடைய ஸம்ஸாரத்தைக் கூப்பிட்டு தன்னிட மீந்த சாமான்களைக் கொடுத்து ஸ்வயம்பாகம் செய்யும்படி செய்து 10 பிராமணர்களுக்கு போஜனம் செய்து வைத்தார்.

இவ்விதமாக அந்த கடன்பட்டிருந்த பிராமணனை ருண முக்தனாகவும் சுகியாகவும் செய்ததினால் துகாராமருக்கு வெகு சந்தோஷமுண்டாயிற்று. தன் பணம் ஸத்காரியத்தில் செலவானதாகவும் நினைத்தார். ஆனல் உடனே அவருக்கு அவலாயீ அம்மாள் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. வீட்டுக்குப்போனவுடன் அவளுக்கு என்ன சொல்லுகிறது என்ற விசாரம் வந்தது. அவருடன் வந்த வியாபாரிகள் முன்னமேயே போய் இதைச் சொல்லிவைத்திருந்தார்கள். துகாராம் வீட்டுக்குப்போக கொஞ்சம் தாமஸம் செய்தார். ஆனல் கடைசியில் அவலாயீ அம்மாளின் வசை சாபம் இவைகளைப் பொறுத்துக்கொள்ளவேண்டியதே என்ற நிச்சயம் செய்து வீட்டுக்குப்புறப்பட்டார். அவர் வீட்டுக்குப்போனபின் அவலாயீ எவ்வளவு தூஷித்தி

ருப்பாளை நீங்களே யோசித்துக்கொள்ளலாம். இதற்குப் பிறகு துகாராமருக்கு எந்த விடத்திலும் கடன் வாங்கச் சரிப்படவில்லை. கஷ்டகாலமோ ஊரில் ரூபாய்க்குஇரண்டுபடி தானியம் விற்க ஆரம்பித்தது. மழையோ சுத்தமாயில்லை. ஆடுமாடுகள் தீனியில்லாமல் மரிக்க ஆரம்பித்தன. இப்பேர்ப்பட்ட சமயத்தில் துகாராமருடைய ஸ்திதி வெகு கேவலமாயிருந்தது. கண்டவனெல்லாம் இவரை இழி வாய்ப் பேச ஆரம்பித்தான், வீட்டுவாயிலில் ஒருவனும் நிற்கவிடு கிறதில்லை. வீட்டில் அரிசி யில்லாமையால், ஸ்திரீகளும் குழந்தைகளும் உபவாஸம் செய்துவந்தார்கள். பிறகு இஷ்டமான பந்து ஜநங்கள் வீட்டுக்குப் போய் அகப்பட்டதைக் கொண்டுவந்து கொடுப்பார். எவனையாவது கடன் கேட்கப் போனால், பழைய கடனைத் தீர்த்து புதுக்கடனைக் கேள் என்று சொல்லிவிட்டு வாயிலிலிருந்து துரத்திவிடுவான். தன் வீட்டுக்கு வருவதை எவனாவது கண்டால் உடனே அவனுக்குத் தலைவலி வரும். உன் ஸம்ஸாரத்தைக் கெடுத்து இப்போது என் ஸம்ஸாரத்தையும் கெடுக்க வந்திருக்கிறாயா, போ என்று சொல்லுவார். இப்படி எங்கேபோனாலும் நாயைத் துரத்துகிறதுபோல் துரத்திவிடுவார்கள். ஆப்த பந்துக்களிடத்தில் போய் இச்சமயத்தில் நீங்கள் கிருபை செய்யாத பக்ஷத்தில் நாங்களெல்லோரும் பிராணன் விடுவோம். நீங்கள் கொஞ்சம் கடன் கொடுக்கவேண்டியது என்று கேட்டாலும் ஒருவருக்கும் தயை வரவில்லை. எங்களுக்கும் உன் ஸ்திதிதான் வந்திருக்கிறது என்று சொல்லுவார்கள். இப்படி ஸ்திதியிருக்க காலஸ்திதியோ நாளுக்கு நாள் கஷ்டமாயிற்று ரூபாய்க்கு ஒருசேர் ஏற்பட்டது. அப்போது ஒருவனுக்கும் அன்னம் கிடைக்காமற் போய்விட்டது. துகாராமருடைய ஜநங்களுக்கு நாலுநாள், எட்டுநாளுக்கு, ஒருதடவை கஞ்சி கிடைப்பதும் துர்லபமாயிற்று. இந்த ஸ்திதியில் மூத்த ஸம்ஸாரம் அன்னம் அன்னம் என்று சொல்லிக்கொண்டு பிராணனை விட்டாள். இதனால் அவர் மிக வெட்கமடைந்தார். இந்தச் சமயத்தில் ஆப்த ஜநங்கள், இனியாவது விட்டல் பஜநத்தை விட்டுவிடு, இந்த வைத்தியகார பஜனையால் உன் குடும்பம் நாசமாயிற்று. ஜனங்களுக்கு முன்பாக முகத்தைக்காட்ட மார்க்கமில்லை. இனியாவது ஹுஷார்ப்படு. இந்த

யெல்லாம் விட்டுவிடு. இல்லாவிட்டால் இதற்கும் கெட்டஸ்திதி வந்து பிராண ஹாநி ஸம்பவிக்கும், என்று சொன்னார்கள். இதைக் கேட்டு துகாராம் சொன்னார்:—விட்டோபா பக்திக்கும் துஷ்காலத்தின் விபத்திக்கும் என்ன சம்பந்தம், எவர்கள் விட்டோபாவின் பக்தி செய்யவில்லையோ அவர்கள் இந்த துஷ்காலத்தில் சாகவில்லையா? நாம் என்ன செய்தாலும் நடக்கவேண்டியது நடந்தே தீரும், விடமாட்டாது. ஏன் என்னை விருதாவாக தூஷித்து வார்த்தைகளைச் செலவுசெய்கிறீர்கள்? பிறகு கொஞ்சநாள் கிரமித்து துகாராமருடைய மூத்த குமாரன் ஸந்தோபா காலஞ் சென்றான். இவனிடத்தில் துகாராமருக்கு வெகு பிரீதி. ஆகையால் இவன் செத்தவுடன் துகாராமருக்குச் ஸம்ஸாரத்தில் பூர்ணமாக விரக்தி ஏற்பட்டது.

13-வது வயதில் ஸம்ஸார பாரத்தை ஒப்புக்கொண்டு வெகு சாமர்த்தியமாய் வியாபாரம் செய்துவந்து மாதா பிதாக்களை துகாராம் சந்தோஷிப்பித்தார். அவர்கள் அதிகநாள் இருக்கவில்லை. இவருடைய 17-வது வயதில் காலம் சென்றார்கள். 18-வது வயதில் தமயன் ஸாவஜியினுடைய ஸம்ஸாரம் இறந்து அவர் விரக்தியடைந்து வீட்டைவிட்டு தீர்த்த யாத்திரைக்குப் போனார். திரும்பவில்லை. 21-வது வயதில் துகாராமருக்கு வெகு கஷ்டம் ஏற்பட்டு எங்கும் க்ஷாமம் ஸம்பவித்தது. ஒரு ஸம்ஸாரமும் ஒரு மகனும் செத்தார்கள். இப்படி ஒன்றுக்குப்பின் ஒன்று விபத்து ஏற்பட, ஸம்ஸாரம் கேவலம் துக்கமயம். அதை நம்பினால் அநேக விபத்திகள் வந்து ஸர்வ ஜநங்களும் நாசமாகும். இப்படி அவருக்கு நன்றாக மநத்தில் தோன்றியது. இந்த நசுவரமான ஸம்ஸாரத்தில் தன்னுடைய ஸ்வல்பகாலத்தைப்போக்குவது நன்றாக இல்லை. ஆகையால் இதைவிட்டு ஸ்வதந்த்ரனாகவேண்டும் என்பதாய் மநத்தில் பூர்ணமாக நிச்சயம் செய்தார். முன்னமேயே துக்கப்பட்டு விரக்தனாயிருந்த துகாராம் இந்த ஆலோசனையிலேயே வீட்டைவிட்டு வெளிப்பட்டு ஹாம்வநாத என்னும் மலையின் பேரில் போய் தியாந நிஷ்டையில் இருந்துவிட்டார். துகாராமரைக் காணோமே என்று அவருடைய தம்பி கான்ஹோபா தேட ஆரம்பித்தான். அவரைத் தேடிப்பார்க்கும் வரையில் அன்னபானம் செய்கிறதில்லை என்ற நிச்சயம் செய்து நாட்டிலும் மலையிலும் தேட ஆரம்பித்தான். இப்படி ஏழுநாள் செய்

தான். யாதொரு தகவலும் ஏற்படவில்லை. ஏழாவது நாள் தற்செயலாய் பாம்பநாத மலையின்பேரில் போனான். அவ்விடத்தில் தம் தமயன் கண்ணை மூடிக்கொண்டு விடோபாவின் நாமஸ்மரணையைச் செய்து கொண்டிருப்பதைக் கண்டான். தமயனைக் கண்டவுடன் கான்ஹோபாவுக்கு வெகு சந்தோஷமுண்டாயிற்று. ஓடிப்போய் அவர்காலைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு வீட்டுக்கு வரவேண்டுமென்று மனுச்செய்துக் கொண்டான். தம்பியினுடைய அதிக ஆவலைக் கண்டு துகாராம் தேஹூவுக்குத் திரும்பினார். ஆனால் வீட்டுக்குப் போகாமல் இந்திரியாணீ நதிக் கரையிலே உட்கார்ந்தார். அவ்விடத்தில் மறுநாள் இரண்டு பேர்களும் ஸ்நாநம் முதலியதைச் செய்து கொண்டு ஏழுநாள் உபவாஸத்தின் பாரணையைச் செய்தார்கள். பிறகு தம்பியை வீட்டிலிருந்த எல்லாப் பத்திரங்களையும் கொண்டுவரும்படி துகாராம் சொன்னார். அவைகளைக் கையில் எடுத்துக் கொண்டு தம்பியைப் பார்த்து, இந்தப் பத்திரங்களைப் பார்த்தால் பிறரிடமிருந்து தமக்கு வரவேண்டியதே அதிகமாக இருக்கிறது, ஆனால் அதைக் கேட்கப் போவதில் பிரயோஜநமில்லை. கேட்கப்போனால் விரோதம் ஏற்படுகிறது. இதைவிட இந்தப் பத்திரங்களைக் கிழித்துவிடுதல் நலம் என்று சொல்லி அவைகளை நதியில் போடப்போனார். அதைக்கண்டு கான்ஹோபா கை கூப்பிச் சொன்னார்:—"பெரியவருக்கு நான் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை; நீங்கள் வைராக்கியத்தை அடைந்தாலும் என்னை ஸம்ஸார பாரம் விடவில்லை. என்னைச் சேர்ந்தவர்களை இரக்ஷிக்கவேண்டியது என் கடமை. அப்போது துகாராம் பாதிப் பத்திரங்களை அவனிடம் கொடுத்து பாக்கிப் பாதியை நதியில் போட்டுவிட்டார். இன்றையத் தினமுதல் எனக்கு ஸம்ஸார தாபத்ரயமில்லை. பிக்ஷை எடுத்து உதரம் போஷிக்கவேண்டியது. எங்கேயாவது இருந்து காலம் தள்ளவேண்டியது. இதுவே எனக்குச்சரி. ஏதாவது வியவஸாயம் செய்து ஸம்ஸாரத்தை நடத்தவேண்டும் என்று நீ சொன்னால் உனக்கும் எனக்கும் சரிப்படமாட்டாது என்று துகாராம் சொன்னார். தமயனாருடைய இந்த நிச்சயமான வார்த்தையைக் கேட்டு கான்ஹோபா ஸம்ஸாரத்தைத் தனிமையாகச் செய்ய ஆரம்பித்தான்.

(இன்னும் வரும்)

A. சிவராவ்.

# ஸங்க்ராந்தி அல்லது உத்தராயணாதி.

ஸங்க்ராந்தி* (ஸம் + க்ராந்தி =) ஸந்தி என்றர்த்தம். அதாவது முன் மாதத்தின் முடிவும் பின் மாதத்தின் துவக்கமும் ஸந்திப்பது ஸங்க்ராந்தி என்று பெயர். ஆகையால், ஒவ்வொரு மாதத் துவக்கத்திலும், மேஷஸங்க்ராந்தி, விருஷப ஸங்க்ராந்தியென, முறையே ஸங்க்ராந்திகள் பெயரிடப்பட்டிருக்கின்றன.†

**க்ராந்திபதம்:**—சக்ராகாரமாயுள்ள ஆகாசமார்க்க (ecliptic) மானது 12 ராசிபாகங்களாகப்பிரிக்கப்பட்டிருப்பதில், இரண்டு ராசி பாகங்களின் ஸந்திஸ்தானமே **க்ராந்திபதம்** என்று பெயர். சூர்யன் தனது வர்ஷயாத்திரையில், இந்த ஸ்தானம் வரும் தினமே **ஸங்க்ராந்தி தினம்.**

## (1) மகராதியும் உத்தராயணாதியும்.
### கி. பி. சுமார் 500

முன்கூறியபடி மாஸ ஸங்க்ராந்திகள் பலவிருப்பினும், மகர (தைமீ) ஸங்க்ராந்தியே ஸங்க்ராந்தியெனவும் மஹாஸங்க்ராந்தியெனவும் விசேஷப்பண்டிகையாய் நம்தேசத்தில்கொண்டாடப்பட்டு வருகின்றது. ஏனென்றால், இத்தினமானது, முற்காலமுதல் உத்தராயண (Winter Solstice) ஆரம்பமாகவும், வைதிககார்யங்களுக்கு வர்ஷாரம்பமாகவும் அநுஷ்டிக்கப்பட்டுவருகின்றது. இவ்வநுஷ்டானமானது ஸௌரமான ரீதியை ஸ்தாபித்த ஜ்யோதிஷ சிரேஷ்டர்களில் ஒருவரான வராஹமிஹிரர் (கி. பி. 500) காலமுதல் ஏற்பட்டதாக ஊஹிக்கலாம்.‡

---

* க்ரம=செல், கடத்தல் என்ற பொருளுள்ள ஸம்ஸ்க்ருதப்பகுதி.

† விஷு—தினம், அயனம், மாஸம், வர்ஷம் என்ற முன் வியாஸங்களில், இவைகளின் தன்மையையும் அமைப்பையும் பற்றி விவரமாய்க் கூறப்பட்டிருப்பதால், இங்கு மறுபடி விவரிக்கப்படவில்லை.

‡ விஷு அபஸரண (Precession of equinox) விதியால், இப்பொழுது உத்தராயணம், சுமார் 22 தினங்கள் முன்னடைந்து, மார்கழிமீ 9 தி ஸமயத்தில் ஏற்படுகிறதென்று, 'அயனம், என்னும் வியாஸத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றது. பூர்ணசந்திரோதயம், 2-ம் தொகுதி 382-ம், 041-ம் பக்கங்களைப்பார்க்க.

ஆகையால் உத்தராயண ஆரம்பமானது, தைமீ முதல் திநத்தில் ஏற்பட்ட காலமானது கி. பி. 500-ம் வருஷத்தில் என மதிக்கலாம்.

ஆனுல்; உத்தராயணுதியானது ஸ்திரமான தல்லவென்றும், விஷுவ அபஸரண விதியால், 72 வருஷங்களுக்கு ஒரு திநம் வீதம் முந்துகின்றதென்றும் கணிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த ஸந்தர்ப்பத்தில் அடியிற் குறிப்பிடப்படும் ஆதாரமானது கவனிக்கத்தக்கது.

ஆஶ்லேஷார்த்தாத்தக்ஷிணம்
உத்தரமயனம் ரவேர் தநிஷ்டாத்யம்।
நூநம் கதாசிதாஸீத்
யேனோக்தம் பூர்வஶாஸ்த்ரேஷு॥

வராஹ மிஹிரர் பஞ்சஸித்தாந்திகை.

"சூர்யன், ஆயில்ய மத்தியிலிருந்து அக்தக்காலத்தில் (தெற்கே) திரும்பினதும், அதனுல் ஏற்பட்ட தக்ஷிணயநமும் அந்தக்காலத்தில் சரிதான். (ஆனுல்) இக்காலத்தில் (வராஹ மிஹிரர் காலமான கி. பி. 500ல்) புநர்வஸு நக்ஷத்திரத்திலிருந்து திரும்புகின்றது."

இதனுல், வராஹமிஹிரர்காலத்தில் தக்ஷிணயநம் கடகாரம்பமானதினுல், உத்தராயணம் மகராரம்பம் என்றும், இவ்வயநாரம்பங்கள் அபஸரிக்கின்றன வென்றும், அவ்விஷயத்தை நமது முன்னோர்கள் அறிந்திருந்தார்களென்றும் நன்ருய்த் தெரியவருகின்றது.

நமது பூர்வஜ்யோதிஷக்ரந்தங்களில் இதுதான் ஸமீபத்தில் செய்யப்பட்ட, விஷுவ, அயநாதிகளின் நிர்ணய சாஸநம்.*

இந்தஸந்தர்ப்பத்தில் இன்னுமொருவிஷயம்கவனிக்கவேண்டிய அவசியம். வராஹ மிஹிரர் காலத்தில் சாந்த்ர மாதங்களெல்லாம் அநேக விடங்களில் அமாந்தங்களாய் (அமாவாஸ்யையுடன் முடிய

* Latest record of the position of equinoxes and solstices

ஜ்யேஷ்டாதிதக்ஷிணாயநம்॥

"ஜ்யேஷ்டம் (ஆனி) முதல் தக்ஷிணயநாரம்பம்"—ஆநந்ததீர்த.

வைகளாய்) சுக்கில பிரதமை முதல் ஆரம்பித்தன வென்றும், விட்டன வென்றும், தைமீ முதல் திரமென்பது, சாந்த்ரமாந ரீதியாய் பௌஷ்ய சுக்கிலப்ரதமையென்றும் அறிந்து கொள்ளவேண்டியது. ஆகையால், அக்காலத்தில் உத்தராயணதியானது பௌஷ்ய சுக்லப்ரதமையில் ஆரம்பித்தது.

இதற்கு முன், நமது பூர்வக்ரந்தங்களில், அயநாதிகளின் சலநத்தைப்பற்றி ஏதாவது குறிப்பிடப்பட்டிருக்கின்றதா என்று கவனிப்போம்·இனி முற்றிலும் சாந்த்ரமான ரீதியாகத்தான் வியவஹரிக்கவேண்டும்.

## (2) வேதாங்கஜ்யோதிஷ காலமும் உத்தராயணதியும். (கி. மு. 1200)

ப்ரபத்யேதே ஶ்ரவிஷ்டாதௌ
ஸூர்யாசந்த்ரமஸாவுதக் ।
ஸார்பார்தே தக்ஷிணார்கஸ்து
மாகஶ்ரவணயோ: ஸதா ॥

வேதாங்கஜ்யோதிஷம் 5-வது சுலோகம்.

“ஸூர்ய சந்த்ரர்கள், அவிட்ட நக்ஷத்ரத்துவக்கத்தில் இருக்கையில் உத்தராயணமும், ஆயில்ய மத்தியில் ஸூர்யனிருக்கையில் தக்ஷிணாயநமும் ஆரம்பிக்கின்றன. அப்பொழுது (முறையே) மாகமாஸமும் ச்ராவண (ஆவணி) மாஸமுமாம்”

வேதங்களின் உண்மையான கருத்துக்களை யறியச் சாதநமான சாஸ்த்ரங்கள் வேதாங்கங்கள்.

ஶிக்ஷாவ்யாகரணம் சந்த:
நிருக்தம் ஜ்யோதிஷம் ததா ।
கல்ப: சேதி ஷடங்காநி
வேதஸ்யாஹுர்மநீஷிண: ॥

---

*வேதாங்கஜ்யோதிஷம் என்னும் சிறிய ஜ்யோதிஷக்ரந்தமானது, ஜ்யோதிஷ சாஸ்திரத்தைப்பற்றியபிரத்யேகமான சாஸ்திரங்களில் ஆதிக்ரந்தம்.

(1) சிக்ஷா (சப்த சாஸ்த்ரம்) = Phonetics
(2) வ்யாகரணம் (இலக்கணம்) = Grammar
(3) சந்தஸ் (விருத்த சாஸ்த்ரம்) = on Metres
(4) நிருக்தம் (நிகண்டு, முதலான சொல்லியல்) = Philology
(5) ஜ்யோதிஷம் = Astrology
(6) கல்பம் (க்ருஹ்யம், தர்மம், ச்ரௌதகர்மவிதிகள்) = on Rituals

இந்த வேதாங்கஜ்யோதிஷகாலத்தில் அயநர்திகளின் நிலைமையைப்பற்றி வித்வத்ஸ்ரீ திலகர் பின்வருமாறு ஸம்க்ஷேபித்துக் கூறுகின்றார்:

(1) உத்தராயணாதி (Winter Solstice) அவிட்டநக்ஷத்ராரம்பத்திலும்,

(2) தக்ஷிணாயநாதி (Summer Solstice) ஆயில்ய மத்தியிலும்

(3) வஸந்தவிஷு (Vernal Equinox) பரணி 10-வது அம்சத்திலும்,

(4) சரத்விஷு (Autumnal Equinox) விசாகம் 3-வது அம்சம் 20-வது கலையிலும்

ஏதாவது ஒரு கிரந்தத்தில், இந்நிலைமைகளில் ஒன்றைப்பற்றி ஜ்யோதிஷக் குறிப்புகள் (Astronomical reference) காணப்பட்டால், அக்கிரந்தம் இன்னகாலத்தியதெனத் தெளிவாய்க் கூறிவிடலாம்.

இக்கால நிர்ணயம்:—வராஹமிஹிரர் காலத்தில், மகராதியான 270-வது அம்சத்தில் உத்தராயணாதியிருந்தாலும், வேதாங்கஜ்யோதிஷகாலத்தில், அவிட்டநக்ஷத்திரத்துவக்கமான 293⅓-வது அம்சத்திலிருந்ததாலும், 72 வருஷத்துக்கு 1 அம்சம் வீதம், 23⅓ அம்சம் அயநாதி முந்துவதற்கு, (72 + 23⅓) = 1680 வருஷங்களாகின்றன. அதாவது வராஹமிஹிரர் காலம் 500 கி. பி. ஆனால், வேதாங்கஜ்யோதிஷ காலம் 1680—500=1180 அல்லது சுமார் 1200 கி. மு. என்று நிர்ணயிக்கப்படலாம்.

(இன்னும் வரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்.

## புத்தக வரவு.

---

கர்மாதுரன் அல்லது தர்மகதியின் கஷ்டமும் ஞான விகாஸமும், (The story of Karmatura) என்ற பெயருள்ள ஆங்கிலத்தில் எழுதியுள்ள ஒரு கட்டுக் கதை (Novel) நமது பார்வைக்கு ஒரு நண்பரால் அனுப்பப்பட்டது. மகா-ா-ா-ஸ்ரீ வி. வேம்புசாஸ்திரியார் B. A., L. T. என்பார் அதை எழுதிய ஆசிரியராவர். சிறிய கதையாக இருப்பினும் இக்காலத்தியவர் அறியவேண்டிய சில முக்கியமான ஞான விஷயங்கள் அதன்கண் அமைக்கப் பெற்றுள்ளன. இதை ஆங்கிலத்தில் எழுதாமல் தமிழ் பாஷையில் நமது ஆசிரியர் எழுதியிருப்பாராகில் நம் தமிழ் நாட்டார்களுக்கு மிகவும் இது பயன் படக் கூடியதாக இருக்கும். இக்காலத்தில் தமிழில் எழுதினால், படித்தவர்கள் என்று பெருமைபாராட்டும் ஆங்கிலம் படித்த நம்மவர் இதைக் கண்ணோக்கார் எனக்கருதி, அன்னிய பாஷையாகிய ஆங்கிலத்தில் இப்புத்தகத்தை நம்மாசிரியர் எழுதியிருக்கின்றார். இப்புத்தகத்தையாவது நம்மாங்கிலம்படித்த நிபுணர்கள் பார்த்து இதன் கண்ணுள்ள ஞான விஷயங்களைத் தெரிந்து கொள்ளுவார்களாக. இதன் விலை அணா 6 தான், இதை வேண்டுவோர் சென்னை Messrs Thompson & Co., Broadway யில் பெற்றுக் கொள்ளலாம்.

---

1. பிரஹ்மஞானசபை அதன் நோக்கமும் பிரயோஜநமும். இதன் விலை அணா ½.
2. பிரஹ்மஞான ஜீவியம், இதன் விலை அணா 1.
3. இந்தியாவின் தத்துவஞானம், இதன் விலை அணா 6.

மேற்கண்ட மூன்று புத்தகங்களையும் புதுவை ஸ்ரீமான் வே. கு. அநந்தநாயக நாயகர் அவர்களிடமிருந்து பெற்றோம். அவைகள் மூன்றும் பிரன்சு பாஷையினின்று தமிழில் ஷை நாயகர் அவர்களால் மொழி பெயர்க்கப் பெற்றவை. இவை மூன்றும் பிரஹ்மஞான விஷயத்தை நன்கு விளக்குகின்றன. தமிழ் நடையும் லகுவாய் அமைந்துள்ளது. தமிழ்நாட்டிலுள்ள பிரஹ்மஞானக் கிளைச்சபைகள் ஒவ்வொன்றிலும் இருக்கவேண்டிய புத்தகங்கள் இவை. வேண்டுவோர் புதுவை பிரஹ்மஞானசபையின் அங்கத்தினரும் பொதுவேலைகள் ஓவர்சீயருமாகிய ஸ்ரீமான் வெ. கு. அநந்தநாயக நாயகரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

---

**Young Citizen.** (வாலிப நகரவாஸி) இப்பெயருள்ள அருமையான மாதாந்த ஆங்கிலப் பத்திரிகை யொன்று சென்னை ஆதியாற்றினின்று மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையாரால் பிரசுரிக்கப்பெற்று இவ்வுலகிலுலாவுகின்றது. ஆங்கிலம் படிக்கும் தற்காலத்து மாணவர்களை உத்தே

சித்து இப்பத்திரிகை ஏற்பட்டது. இதன்கண் உயர்ந்த நீதி முறைகளும், பொது நோக்கான தர்ம முறைகளும், உயர்ந்த ஞானிகளின் சரித்திரங்களும் அவர்களின் படங்களுடன் வெளிவந்துகொண்டிருக்கின்றன. ஆங்கிலம் படிக்கும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் மிகவும் உபயோகமான ஞானஸாதனமாகும். இதை ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்க வேண்டியதவசியம். இதன் ஞூ சந்தா ரூ 1—4—0 தான். இப்பத்திரிகை வேண்டுவோர்கள் "சென்னை ஆதியாற்றில் தியஸாபிகல் பப்ளிஷிங் ஹவுஸ் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

ஞானமிருதம் :—முதற்பாகம். இது ஒரு கதைப் புஸ்தகம். வெறுங் கதையாக மாத்திரமில்லாமல், அரிய பெரிய ஞான விஷயங்கள் உரியமேற்கோள்களுடன் அமையப் பெற்றுள்ளது. தமிழ் நடை எளிதாகவிருக்கிறது. இது நன்றாய் அச்சேறியிருக்குமாகில் இன்னும் அதிகச் சிறப்பாய் மதிக்கக்கூடியதாக இருக்கும். இதன் விலை அணா 10. வேண்டுவோர், கும்பகோணம் லோகானுகூலன் பத்திராதிபருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

பத்திராதிபர்.

---

## சமாசாரம்.

ஸத்யமேவ ஜயதி நாந்ருதம்:—ஸ்ரீமான ஜீ. நாராயண ஐயர் என்பவர் கவர்ண்மெண்ட் பென்ஷன் பெற்று வருகிற தாசில்தார். தெலுங்கு பிராஹ்மணர். பிரஹ்மஞானசபையின் அங்கத்தினர், அச்சபையின் உள்வகுப்பினராகவும் (Esoteric Section) இருந்து உத்தரவாதமான வேலையையும் வகித்திருந்தனர். அவருக்கு நாலுபிள்ளைகள் உயிருடன் இருக்கிறார்கள். அவர்களில் ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி, நித்தியாநந்தர் என்பவர்கள் இருவரையும் அவர்கள் உயர்ந்த படிப்பைப் பெறவேண்டி மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மைவசம் ஒப்புவித்தார். அவ்விருவர்களும் இப்போது இங்கிலாண்டு தேசத்தில் ஆக்ஸ்போர்டு யூனிவெர்ஸிடி கலாசாலையில் சேரும்படியாக ஆயத்தமாகிக் கொண்டு வருகிறார்கள். உயர்ந்த அந்தஸ்துள்ள கற்சீலர்களின் மேல்விசாரணையில் கல்விகற்றுக்கொண்டுவருகிறார்கள். பிரகிருதஸ்திதியில் தம் ஸ்வயபுத்தியினாலோ பிறரால் தூண்டப் பட்டோ ஷை நாராயண ஐயர் என்பவர் தம்முடைய இரண்டு பிள்ளைகளையும் வரப்பெறுவதற்காக செங்கல்பட்டு டிஸ்டிரிக்ட் கோர்டில் மாதுஸ்ரீ பெஸண்ட் அம்மையின் பேரில் சென்ற வருஷம் அக்டோபர் மீ த்தில் வியாஜ்யம் தொடர்ந்தார். அவர் செய்தபிரியாதில் மனங்கூசாமல் தம் குமாரர் கிருஷ்ணமூர்த்தியின்பேரிலும் ஷை அம்மையின் பேரிலும் அவருடைய ஞானத்தோழரும், குப்த சாஸ்திர ஆராய்ச்சிமுறையில்

கூடவேலைசெய்கிறவருமான ஸ்ரீமான் லெட்பீடர் அவர்கள்பேரிலுமாகச்சில அபவாதங்களைத்தம்முடைய வியாஜ்யத்திற்கு அநுகூலமாகவிருக்குமென்று துரெண்ணிக்கொண்டு வெளிப்படுத்தியிருந்தனர், ஷை வியாஜ்யம் ஹைகோர்ட்டுக்கு மாற்றப்பட்டு சிலமாதங்களாக ஹைக்கோர்ட்டு ஜட்ஜ் ஸ்ரீமான் பேக்வெல் முன்பாக விசாரணை நடந்தது, பல ஸாக்ஷிகள் சென்னையிலும் காசியிலும் பாபாயிலும் விசாரிக்கப்பட்டார்கள். சென்ற மாதம் 15 உ அடியில் வருமாறு ஜட்ஜ் தீர்மானம் சொன்னார். —

பிதாவாகிய வாதி புத்ரர்களைத் திரும்பவும் தம் வசம் பெற்றுக்கொள்ள பூர்ண ஸ்வதந்த்ரர்களா யிருக்கிறாரென்றும் அதனால் பிரதிவாதியாகிய மாதுஸ்ரீ.பெஸண்டு அம்மை பையன்களை வாதி வசம் மேமீ 26-ம் தேதிக்குள் ஒப்புவிக்கவேண்டுமென்றும் இருவர்களுக்கும் இப்பிரகிருதத்தில் வயஸ் 18 15 ஆக இருந்தாலும் ஒவ்வொருவரும் 21 வயஸ் வரைக்கும் மைனர்களாக இருக்கக்கடவர் என்றும்தம்முடையகுமாரர் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திபேரிலும் பிரதிவாதிமாதுஸ்ரீ பெஸண்டு அம்மை அவர்கள்பேரிலும் ஸ்ரீமான் லெட்பீடர் அவர்கள்பேரிலும் சொன்ன அபவாதங்கள் பொய்யானவைகள் என்றும் கட்டுப்பாடானவைகளென்றும் அதனால் விசாரணையை வாதி வீணாக அக்கிரமமாக வளர்த்துவிட்டாரென்றும் வாதி தம்முடைய செலவைப் பொறுத்துக் கொள்வது மல்லாமல் பிரதிவாதியின் சகல செலவுகளையும் கொடுக்கவேண்டுமென்றும் ஷை நியாயாதிபதி அவர்கள் தீர்மானித்தார்கள்,

நிரபராதிகளான ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி பேரிலும் ஸ்ரீமான் லெட்பீடரவர்கள் பேரிலும் அக்ரமமான அபவாதங்களைக் கட்டுப் பாடாய்ச் சொல்லிய வாதியின் பாதுகாப்புக்குட்பட்டு ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி என்பாரை ஒப்புவிக்கவேண்டுமென்று செய்திருக்கிற தீர்மானம் நேர்மையானதன்று. பிரஹ்மக்ஞானசபையின் சில முக்கியஸ்தர்களைப்பற்றிச் செய்த அவதூறுகள் பொய்யானவையென்று ஸாக்ஷியத்தின் மூலமாய் பகிரங்கமாய்த் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. பிறருக்குத் தீமைநினைக்க அதுதமக்கே விளைந்தது. ஷை தீர்மானத்தால் ஸ்ரீமான் நாராயண ஐயா தம்மைப் பொய்யரென்று பிரஸித்தம் செய்துகொண்டார். ஷை தீர்மானத்தால் பிரஹ்மக்ஞான ஸபையென்ற ஞானஸூர்யன் மேகம் நீங்கிய பானுவைப்போல் விளங்குகிறது. உண்மையில் வெற்றி பிரஹ்மக்ஞானஸபையாருக்கென்றே சொல்லலாம். இரண்டு பையன்களையும்வாதி வசம் ஒப்புவிக்கும்படி செய்த தீர்மானத்தை மாற்றும்படி அப்பீல்செய்யப்பட்டிருக்கிறது. மேல்கோர்ட்டில் இந்தத் தீர்மானம் ஸந்தேகமன்றி மாறிவிடுமெனமதிக்கிறோம். அப்போதுபிரஹ்மக்ஞான ஸபையின் வெற்றி பூர்ணம் பெறும். அப்பீல் முடிவாகும்வரை கீழ்க்கோர்ட்டுத் தீர்மானத்தை நிறை

வேற்றக்கூடாதென்று அப்பீல்கோர்ட்டில் மாதுஸ்ரீ பெஸண்ட் அம்மை மனுக்கொடுத்திருந்ததில் மைனர்களை வாதிவசம் ஒப்புவிக்கிறதற்கு ஜுலை மீ 7வ வரை அப்பீல் கோர்ட்டாரால் வாயிதாகொடுக்கப்பட்டிருக்கிறது. பூராவும் நிறைவேற்றாமல் நிறுத்திவைக்கக் கூடாதென்று அப்பீல்கோர்ட்டார் உத்தரவுசெய்துபோட்டார்கள். மாதுஸ்ரீ பெஸண்ட் அம்மையார் நாளிது மீ 17வ இங்கிலாண்டுக்குப் போவதாக உத்தேசித்திருக்கிறார்கள்.

---

சிக்காகோ நகரத்தில் ஸ்திரீகளுக்கு என்று தனித்த ஒரு நியாய ஸ்தலம் (Court) ஏற்பட்டுள்ளது. நியாயாதிபதிகள் முதல் எல்லா வேலைக்காரர்களும் (கிளார்க்குகள், சேவகர்கள், வக்கீல்கள் முதலியவர்கள்) ஸ்திரீகளேயாவர். இந்த நியாயஸ்தலம் நன்றாயும் திருப்திகரமாயும் நடைபெற்று வருகிறது. நியாயம் தவறவில்லையாம். புருஷர்கள் நியாயாதிபதிகளாய் உள்ள கோர்டுகளைவிட இந்த கோர்டில் ஸ்திரீகள் தங்கள் முறைகளைக் கூசாமல் தெரிவிக்கிறார்களாம்.

---

"பிறர்பிணிதீர்த்தல் அறமெனத்தகும்"

மாட்சிமை தங்கிய ஜார்ஜு சக்கரவர்த்தியார் வைத்தியசாலை:— மதுரையில் இப்போது இருக்கிற ஆங்கிலவைத்தியசாலை பிரகிருதத்தில் மதுரையிலுள்ள ஜனத்தொகையை உத்தேசிக்க மிகவும்போதாததாக விருக்கிறது. நூதனவைத்திய முறைகள் எல்லாம் அடங்கிய ஒரு பெரிய புதிய வைத்தியசாலை நிர்மாணம் செய்வதற்காக சென்ற ஏப்ரல் மீ 9வயில் மதுரையில் திருமலை நாயக்கர் மஹாலில் ஒரு மஹாசபை கூடிற்று. மதுரைஜில்லா ஜட்ஜு ஸ்ரீமான் பர்ன் துரை அக்கிராஸநம் வகித்தார், கனந்தங்கிய ஸர்ஜன் ஜனரல் பானர் மான் என்பார் ஒரு நூதன வைத்தியசாலையை ஏற்படுத்தவேண்டிய அவசியத்தைப்பற்றி விஸ்தாரமாக உபந்யசித்தார், ஒரு சரியானஇடத்தில் விஸ்தாரமான வைத்தியசாலை மதுரைநகரில் நிர்மாணம்செய்யவேண்டுமெனத் தீர்மானம் செய்யப்பெற்றது, நமது மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தி ஜார்ஜு அவர்களின் திருநாமத்தை அதற்கு இடவேண்டுமென்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது, இத்தீர்மானங்களை நிறைவேற்ற 64 பேர் அங்கத்தினர்கள்உள்ள ஒரு கமிட்டி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது, அடியிற்கண்டபடி ரூ 121000க்கு அநேகதனவான்கள் கையொப்பமிட்டிருக்கிறார்கள், சுமார் 10 லக்ஷம் வரையில் சேகரித்தால் சரியான செள

கார்யங்கள் அமையப்பெற்ற வைத்தியசாலையை ஏற்படுத்தலாம். சொற்ப பணம் போதாது, மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களில் உள்ள தனவான்கள் இத்தகைய தர்மத்திற்கு உதவிபுரிவார்கள் என நம்புகிறோம்.

கொடையாளிகள்.

| | | |
|---|---|---|
| 1. | போடிநாயக்கனூர் ஸ்ரீமான் சுப்பன் செட்டியார் அவர்கள் (தொகை கொடுத்துவிட்டார்கள்,) | ரூ 10,000 |
| 2. | சிவகெங்கை ஜமீன்தாரவர்கள் | ரூ 20,000 |
| 3. | மதுரை மில்ஸ் கம்பெனி | ரூ 15,000 |
| 4. | மதுரை ஸௌராஷ்ட்ரர்கள் | ரூ 30,000 |
| 5. | மகா-ள-ள ஸ்ரீ உத்தமபாளையம் M. T. ஸுப்ரமணிய முதலியாரவர்கள் | ரூ 10,000 |
| 6. | மகா-ள-ள ஸ்ரீ கூளையநடாரவர்கள், திருமங்கலம் | ரூ 1000 |
| 7. | மகா-ள-ள ஸ்ரீ முத்துசெட்டியாரவர்கள் சிறுவாலை ஜமீன்தார் (தன் தாயாரின் ஞாபகச்சின்னமாக நிலங்களாக) | ரூ 10,000 |
| 8. | இராமநாதபுரம் ராஜா அவர்கள் கொடுப்பதாக வாக்களித்திருப்பது | ரூ 25,000 |
| | ஆக | ரூ. 121,000 |

வேண்தாமரை நாள்:—வழக்கம்போல் நாளிதுமீ 8உ மதுரை பிரஹ்மஞான ஸபையாரால் வெகு விமர்சையாய்க் கொண்டாடப் பெற்றது. அன்று பகல் சுமார் 1000 ஏழை ஜநங்களுக்கு அந்நம் கொடுக்கப்பட்டது. அன்று சாயங்காலம், உபநிஷத் மந்த்ரங்களின் கானம் திவ்யமாய் நடைபெற்றது. பகவத்கீதை, Light of Asia என்ற புத்தகங்களிலும் ஒரு குறிப்பிட்ட பாகத்தை எடுத்து அங்கத்தினர்கள் வாசித்தார்கள்.

---

பத்திராதிபர்.